# உதயன்

விலை ரூபா 7.00

சுடர் 17 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி 26 செவ்வாய்க்கிழமை (12-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:350


**அரசியல் கட்சியாக இருந்துகொண்டு தேசவிரோத நடவடிக்கை**

# வன்செயல்களுக்கு எல்லாம் பின்னணியில் ஜே.வி.பிதான்!

## சூறாவளி அபாயம்

இலங்கையின் தென்கிழக்குப் பிரதேசத்தை சூறாவளி தாக்கலாம் என்று வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக காலநிலையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது எனவும் அவதான நிலையம் தெரிவித்திருக்கிறது. இதனால் வடக்கு - கிழக்கு கடல் பிரதேசம் கொந்தளிப்பானதாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)


☞ மீட்புநிதி பெறுவோரின் பெயர்ப்பட்டியல் 13ஆம் பக்கத்தில்


## உள்துறை அமைச்சர் அமரதுங்க நாடாளுமன்றில் நேற்று அறிக்கை

கொழும்பு,நவம்பர் 12

**நாட்டில் ஆங்காங்கே இடம்பெற்றுவரும் வன்செயல்கள், அசம்பாவிதங்கள் ஆகியவற்றின் பின்னணியிலிருந்து ஜே.வி.பி. செயற்படுகிறது என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்றுக் காலை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். இவை தொடர்பாக நம்பத்தகுந்த தகவல்கள் கிடைத்திருக்கின்றன எனவும் இவ்வாறான தேசவிரோதச் செயல்களில் ஜே.வி.பி. ஈடுபடுவதைத் தொடர்ந்து அனுமதிக்கமுடியாது எனவும் அமைச்சர் சொன்னார்.**

சபையில் கவன ஈர்ப்பு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் ஜோன் அமரதுங்க ஜே.வி.பி. மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தினார். குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற எச்சரிக்கையையும் அவர் விடுத்தார்.

நேற்றுக் காலை 10 மணிக்கு சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் சபை கூடியபோது சபாநாயகரின் முன் அனுமதியுடன் நாட்டின் முக்கியத்துவம் கருதி கவன ஈர்ப்பு அறிக்கை ஒன்றை உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க சபையில் விடுத்தார்.

அமைச்சர் ஜோன் அமரதுங்க சபையில் கூறியதாவது:-

நேற்றுமுன்தினம் வலஸ்முல்லை என்ற இடத்தில் உள்ள தேயிலைத்


(14ஆம் பக்கம் பார்க்க)


## குடாநாட்டு உணவு விநியோகம் தொடர்பாக கொழும்பில் மாநாடு

யாழ்ப்பாணம்,நவ.12

யாழ்.குடாநாட்டுக்கு எதிர்காலத்தில் உணவு விநியோகத்தை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்து ஆராய பிரதமர் அலுவலகத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி மாநாடு ஒன்று இடம்பெறவுள்ளது.

உணவு விநியோகம் தொடர்பான பிரதமரின் ஆலோசகரான டபிள்யூ.ஏ. விஜயதாஸ தலைமையில் இடம்பெறும் இந்த மாநாட்டில் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அதிகாரிகள், கூட்டுறவு அபிவிருத்தி அமைப்பு அதிகாரிகள் உட்பட உயர் அதிகாரிகள் பங்குபற்றவிருக்கின்றனர்.

குடாநாட்டுக்கான உணவு விநியோகத்தை சீராகவும் முறையாகவும் மேற்கொள்வதற்கான திட்டம் ஒன்று குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்படவிருக்கிறது.

உணவு விநியோகத்தில் இடம்பெற்றுவரும் மோசடிகள், ஊழல்களை நீக்கும் நோக்குடன் இத்திட்டம் வகுக்கப்படவிருக்கிறது. (ம-3)

## தலைவர் பிரபாவுக்கு எதிரான தீர்ப்பை ஆட்சேபித்து கிளிநொச்சியில் பேரணி

கிளிநொச்சி,நவ.12

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனுக்கு எதிராக மேல்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு தங்கள் ஆட்சேபத்தை வெளிப்படுத்துவதற்காக வன்னிப் பிரதேச மக்கள் கிளிநொச்சியில் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றிய ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தப்பேரணி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் இருந்து ஆரம்பமாகவுள்ளது. அங்கிருந்து கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தை பேரணி சென்றடையும். அங்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் கையளிக்க ஏற்பாடாகியுள்ளது.

இந்தப்பேரணியில் அரசசார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புக்கள், கல்வித்துறைசார் அமைப்புக்கள், வர்த்தக மற்றும் போக்குவரத்து பொது நிறுவனங்களைச் சார்ந்த அனைத்து தரப்பினரும் கலந்துகொள்வர். (ம-9-4)

## அரச ஊழியர்களில் ஒரு பகுதியினர் சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெறலாம்

### விரைவில் வருகிறது புதிய திட்டம்

கொழும்பு,நவ.12

அரச ஊழியர்களில் ஒரு பகுதியினரை சேவையில் இருந்து சுயவிருப்பத்தின் பேரில் விலக வழி செய்யும் திட்டம் ஒன்றை நடைமுறைக்கு கொண்டுவருவது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருவதாக அறியவந்தது.

சம்பள முரண்பாடுகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட திஸ்ஸ தெய்வேந்திரா ஆணைக்குழுவின் சிபார்சுக்கமைய 30 சதவீதமான அரச ஊழியர்களை வேலையிலிருந்து ஓய்வு பெறச் செய்யும் வகையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

அரச ஊழியர் ஒருவர் ஓய்வு பெறும் வயதுக்கு முன்பே சில சலுகைகளின் அடிப்படையில் சேவையிலிருந்து விலக இத்திட்டம் உதவும்.

அரச ஊழியர் ஒருவர் எட்டு லட்சம் ரூபாவை நஷ்டஈடாக பெற்றுக்கொண்டு ஓய்வுபெறலாம். அவருக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு கிடைக்காது.


(14ஆம் பக்கம் பார்க்க)


## கடற்புலிகள் - கடற்படையினர் முகமாலையில் நாளை சந்திப்பு

யாழ்ப்பாணம்,நவ.12

ஸ்ரீலங்கா கடற்படையின் உயர் அதிகாரிகளுக்கும் கடற்புலிகளின் முக்கிய தளபதிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு முகமாலை சூனியப்பிரதேசத்தில் இடம்பெறவுள்ளது.

வடபிராந்திய கட்டளை அதிகாரி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, கிழக்கு கட்டளை அதிகாரி சரத் ரத்னகீர்த்தி ஆகியோர் கடற்படையினர் தரப்பிலும் - புலிகளின் தரப்பில் கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை உட்பட மற்றும் தளபதிகளும் பங்குபற்றுவர்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரொன்ட் புருஹோவ்டே முன்னிலையில் இச்சந்திப்பு இடம்பெறும்.

மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை, கடற்போக்குவரத்துப் பிரச்சினை உட்பட பல விடயங்கள் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படவிருக்கிறது. (ம-3-4)

## புலிகளின் புகழ் பாடுகின்றார் புளொட் தலைவர் சித்தார்த்தன்

சமாதானம் மலரும் என்ற நம்பிக்கை மக்களிடையே ஏற்பட்டுள்ளது. அதேபோன்று சமாதானப் பேச்சுக்களும் முன்னேற்றமடைந்து வருகின்றன. அதற்குப் பொருத்தமாக புலிகள் அமைப்பும் என்றுமில்லாதவாறு பல விடயங்களை விட்டுக் கொடுக்கிறது.

இவ்வாறு வன்னி மாவட்ட புளொட் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யுத்தம் காரணமாக வடக்கு-கிழக்கு பெரிதும் பாதிக்கப்பட்டு அழிந்துபோயுள்ளது. தென்மராட்சி என்ற ஓர் இடம் இருந்ததா என்று கூடத் தெரியாமல் போயுள்ளது.

யுத்த உபகரணங்களுக்கான கடனை இன்றும் நாம் அடைத்துக் கொண்டு இருக்கிறோம். இன்று நடப்பது வெளிநாட்டில் இடம்பெறும் முதலாவது சமாதானப் பேச்சு அல்ல. இதற்கு முன்னரும் திம்புவில் பேச்சுக்கள் நடைபெற்றன. அப்போது புலிகள் இயக்கம் உட்பட ஆறு தரப்பினர் அதில் கலந்து கொண்டனர். அவற்றுள் புலிகள் இயக்கம் தவிர்ந்த ஏனையோர் ஜனநாயக அரசியலுக்கு திரும்பின. புலிகள் இயக்கம் மட்டும் தனது தனிநாட்டுக் கொள்கையைக் கைவிடாது தொடர்ந்தும் போராடி வந்தது. இன்று அவர்கள் விட்டுக் கொடுப்புடன் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

சமாதான முன்னெடுப்புக்களின் போது சம்பிரதாயபூர்வமாக எதிர்க் கட்சிகள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிப்பதில் பெரும்பான்மைக் கட்சிகளுக்கு இருக்கும் வேகம் அவற்றைத் திருப்பிக் கொடுப்பதில் காணவில்லை. தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசு என்ற


(14ஆம் பக்கம் பார்க்க)


## ஈ.பி.டி.பி. கையளித்த பிஸ்டல்களை சோதனைக்கு உட்படுத்த உத்தரவு

### யாழ். நீதிமன்றம் நேற்று விடுத்தது

யாழ்ப்பாணம்,நவ.12

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் ஈ.பி.டி.பி. அமைப்பால் கையளிக்கப்பட்ட ஆயுதத் தொகுதியில் இருந்த 9 மில்லிமீற்றர் கைத்துப்பாக்கிகளை குற்றப் புலனாய்வுப்பிரிவுப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கும்படி இராணுவத் தளபதிக்கு யாழ். நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயமே இந்த உத்தரவை யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா விடுத்தார்.

இந்த வழக்குத் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப்புலனாய்வுத்துறை இன்ஸ்பெக்டர் ரஞ்சித் டி சில்வா மேலதிக அறிக்கை ஒன்றை நீதிமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பித்தார்.

நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட இடத்தில் மீட்கப்பட்ட 9 மில்லி மீற்றர் துப்பாக்கிக்குரிய ரவைகளை பகுப்பாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வசதியாக அந்த ரகத்துப்பாக்கிகளையும் பகுப்பாய்வு செய்யவேண்டியுள்ளது. இதற்கு வசதியாக ஈ.பி.டி.பி அமைப்பிடம் இருந்த அந்த ரகத்துப்பாக்கிகளை பெறுவதற்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று அவர் அந்த அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து புரிந்துணர்வு உடன்


(14ஆம் பக்கம் பார்க்க)


## மு.காங்கிரஸ் எம்.பிக்கள் நேற்று சபையில் இல்லை!

கொழும்பு,நவ.12

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகியிருக்கவில்லை. நேற்று பிற்பகல் வரை முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் எவரும் சபைக்கு வரவில்லை.

நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பைக் கைவிட்டுள்ள மு.கா. எம்.பிக்கள் 7 பேரும் நாடாளுமன்றத்துக்கு வருவர் எனவும் சபையில் தனிக்குழுவாக இயங்குவர் எனவும் நேற்றுமுன்தினம் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும், அந்த எம்.பிக்களோ அல்லது மு.காவின் ஏனைய எம்.பிக்களோ நேற்று சபைக்கு வரவில்லை. அமைச்சர் ரவூப் ஹக்கீமும் சபையில் காணப்படவில்லை. (ம)


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### வலஸ்முல்ல பகுதியில் சம்பவம்:

# ஆர்ப்பாட்டக்காரர்கள் மோதல்; பொலீஸ் வாகனம் தீயிட்டு எரிப்பு!

கொழும்பு,நவ.12

வலஸ்முல்ல பகுதியில் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் ஒன்று கலவரத்தில் முடிவுற்றது. இக்கலவரத்தின்போது பொலீஸ் வாகனம் ஒன்று தீயிட்டு எரிக்கப்பட்டது.

பொலீஸாருடன் ஏற்பட்ட மோதலில் நால்வர் காயமடைந்தனர்; இரு பொலீஸாரும் காயமுற்றனர்.

அப்பகுதியில் உள்ள தேயிலைத் தொழிற்சாலை ஒன்றுக்கு தாங்கள் வழங்கிய கொழுந்துக்கு பணம் வழங்கக் கோரி சுமார் 500 பேர் நேற்று முன்தினம் மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தற்போது மூடப்பட்டிருக்கும் தொழிற்சாலையின் அதிகாரிகள் தங்கியிருக்கும் விடுதியின் எதிரிலேயே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காகப் பொலீஸார் வரவழைக்கப்பட்டனர். அங்கு வந்த பொலீஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே மூண்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலீஸார் மீது கற்களை எறிந்தனர் எனக் கூறப்பட்டது.

பொலீஸார் பதிலுக்கு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் நால்வர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இச்சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்ட வலஸ்முல்ல பொலீஸார் பத்துப்பேரைக் கைதுசெய்திருக்கின்றனர். (ம)

# உயிரிழந்த உறுப்பினருக்கு ஈ.பி.டி.பி. அமைப்பு அஞ்சலி

யாழ்ப்பாணம்,நவ.12

அனலைதீவில் உயிரிழந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் புஷ்பராஜாவுக்கு அஞ்சலி செலுத்தி அந்த அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 1991ஆம் ஆண்டுமுதல் எமது கட்சியில் இணைந்து செயற்பட்டுவந்த இந்தத் தோழனின் உயிரிழப்பு கட்சியை கவலையில் ஆழ்த்தியுள்ளது. எனினும், இத்துயரச் சம்பவத்தையும் அரசியல் லாபத்திற்காகப் பயன்படுத்த விழைந்த சிலர் தவறான வதந்திகளைப் பரப்பி அநாவசிய சந்தேகங்களைத் தூண்டமுற்பட்டமை கண்டு மிகுந்த விசனம் அடைந்துள்ளோம்.

இவர் கட்சியின் நலன்களுக்காக கடந்த காலத்தில் ஆற்றிய சே[illegible]களை நன்றியுடன் நினைவு கூர்[illegible] அவருக்கு கட்சி தனது இதய அஞ்சலியைச் செலுத்துகின்றது. அத்துடன் அன்னாரின் இழப்பில் துயரமடைந்திருக்கும் குடும்பத்தார் மற்றும் சுற்றத்தவர், தோழர்கள், நண்பர்கள் அனைவரோடும் கட்சி தனது துயரங்களைப் பகிர்ந்து கொள்கிறது - என்றுள்ளது. (ம-3)

# வன்னியிலிருந்து 185 புலிகள் மட்டக்களப்புக்கு வருகை

கொழும்பு,நவ.12

வன்னியிலிருந்து விடுதலைப் புலிகளின் மற்றுமொரு அணி நேற்று மட்டக்களப்பை வந்தடைந்தது.

185 விடுதலைப் புலிகளுடன் வந்த வாகன அணிக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

மட்டு.-அம்பாறை புலிகளின் தளபதி ராபர்ட் தலைமையில் 70 ஆண் போராளிகளும், மட்டு.-அம்பாறை பெண்கள் அணியின் தளபதி நிலாந்தினி தலைமையில் 115 பெண்போராளிகளும் வந்தனர்.

கடந்த மாதம் வன்னியில் இடம்பெற்ற தமிழீழப் பெண்கள் தினத்தில் கலந்துகொள்வதற்காக மட்டக்களப்பிலிருந்து தரைமார்க்கமாகச் சென்ற பெண்கள் அணியினரே மீண்டும் மட்டக்களப்பு திரும்பியுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (ம)

### அனலைதீவு மர்ம மரணம்:

# ஈ.பி.டி.பி. பொறுப்பாளரை கைதுசெய்யுமாறு உத்தரவு!

யாழ்ப்பாணம்,நவ.12

அனலைதீவுப் பகுதியில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் புஸ்பராசா என்பவர் மர்மமான முறையில் மரணமான சம்பவம் தொடர்பாக அந்த அமைப்பின் அனலைதீவுப் பொறுப்பாளர் நிஷாந்தனைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பொலீஸாருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை அனலைதீவுப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து புஸ்பராசாவின் சடலம் மீட்கப்பட்டது தெரிந்ததே. இவரின் மரணம் தொடர்பான மரண விசாரணையை நடத்திய ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ச. இளங்கோவன் சாட்சியங்களைப் பதிவுசெய்தார்.

இறப்பதற்கு சில மணிநேரத்துக்கு முன்னர் ஈ.பி.டி.பியின் அனலைதீவுப் பொறுப்பாளர் நிஷாந்தன் தன்னைத் தாக்கியதாகவும் அதனால் நெஞ்சில் நோ ஏற்பட்டுள்ளதாகவும் இறந்தவர் தன்னிடம் கூறியதாக அவரின் காதலியான பிறேமலதா மரண விசாரணையின்போது தெரிவித்தார்.

இதையடுத்தே நிஷாந்தனை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

குறிப்பிட்டநபர் இறந்துகிடந்த வீட்டின் அலுமாரியில் இருந்து 'லெனோட்' என்ற கிருமிநாசினிப் பவுடர் மீட்கப்பட்டதாகப் பொலீஸார் நீதிவானிடம் தெரிவித்தனர்.

இதேவேளை -

சடலம் மீதான பிரேத பரிசோதனை நேற்று யாழ்.ஆஸ்பத்திரியில் இடம்பெற்றது. இறந்தவரின் உடலில் விஷம் கலந்திருப்பது பிரேத பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கப்பட்டதாக அறியவந்தது. (ஐ-3-12)

# பிரபா மீதான தண்டனையைத் தடுக்க தமிழ் அரசியல்வாதிகள் தவறிவிட்டனர்

### புதிய ஜனநாயகக்கட்சி அமைப்பாளர் உரை

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பை சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தித் தடுப்பதற்கு சட்டவாளர்களும் சட்ட அறிவு நிரம்பிய எமது அரசியல்வாதிகளும் தவறிவிட்டனர். இந்த வழக்குத் தொடர்பான முன்யோசனை இல்லாமையும் அக்கறையீனமுமே இதற்கு காரணம்.

புதிய ஜனநாயகக்கட்சியின் தேசிய அமைப்பாளரான சட்டத்தரணி இ.தம்பையா இவ்வாறு தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் நான்காவது தேசிய மாநாட்டை ஒட்டிய பொதுக் கூட்டம் கடந்த சனியன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தலைவர் பிரபாகரனுக்கு விதிக்கப்பட்ட 200 வருட சிறைத்தண்டனையானது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டது. சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தி தமிழ் அரசியல்வாதிகளும் சட்டவாளர்களும் அந்தச் சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டனர்.

தீர்ப்பின் கடைசிநேரத்திலகூட இதைத் தடுத்திருக்கலாம். இந்தப் பிரச்சினையை தாய்லாந்துப் பேச்சுக்களில் முன்வைப்பதற்கான ஆலோசனைகளையோ நடவடிக்கைகளையோ முன்வைக்க தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தவறவிட்டமை துரதிர்ஷ்டவசமானதாகும்.

இந்தத் தீர்ப்பு வெளியிடப்படுவதற்கு 36 நாள்களுக்கு முன்பாகவே தீர்ப்புக்கு திகதியிடப்பட்டிருந்தது. இரண்டாம் கட்ட பேச்சு ஆரம்பமான பொழுது அது வெளியிடப்பட்டது. இதற்கு ஏதாவது உள்நோக்கம் இருக்குமா என்பதை நான் சொல்ல முடியாது. நாங்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

ஆனால், அந்த வழக்கோடு சம்பந்தப்பட்ட சட்டவாளர்களுக்கு இது முன்கூட்டியே தெரியாமல் இருந்திருக்க முடியாது. தீர்ப்பு வெளியிடப்பட்டபின் பொது மன்னிப்பு கிடைக்கும் என்பது கேலித்தனமானது மட்டுமன்றி விடுதலைப் போராட்டத்தை மலினப்படுத்துவது போலுமாகும்.

விடுதலைப் போராட்டத்திற்கு எமது கட்சி என்றும் ஆதரவு தெரிவித்தே வந்துள்ளது. நாங்கள் சுயநிர்ணய உரிமைக்காகவே குரல் கொடுத்தோம்; போராடினோம். நாங்கள் துரோகிகளாக அன்றி போராட்டவாதிகளாகவே குரல் கொடுத்தோம்.

நாங்கள் மாக்ஸியவாதிகள்.

இந்த நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், மலையகத்தமிழர் என நான்கு தேசிய இனங்கள் உண்டு. இவற்றின் விடுதலைக்காக மட்டுமன்றி இந்த இனங்களில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் நாங்கள் போராடிவருகிறோம்.

ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்கள் சிங்கள இனத்திலும் இருக்கிறார்கள். ஆற்றுக்குள் சுழியோடி மணல் [illegible] ஜீவிக்கும் பெண்களும் அவர்[illegible] இருக்கிறார்கள்.

இந்த சூழலில் நாங்கள் மிகவும் நிதானமாக நடக்க வேண்டும். போராட்டத்தின் வெற்றியே சமாதானப் பேச்சு. இதை சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

ஜே.ஆர். 1979ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தை கொண்டு வந்த பொழுது அது ஒருவருடத்திற்குத்தான் நடைமுறையில் இருக்குமெனக் கூறி தமிழ் அரசியல்வாதிகளை சமாளித்துவிட்டார். அவர்களும் அதை நம்பினர். இப்போது அது எங்கேயோ வந்து முடிந்துவிட்டது. நாங்கள் மிக அவதானமாகச் செயற்படவேண்டும். பேச்சுக்கு இடையில் முத்திரைகள் குத்தப்படக்கூடாது - என்றார் அவர். (ம-88)

# 'தவளைப் பாய்ச்சல்' நடவடிக்கையின் 9ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று

### வன்னியில் சிறப்பு நிகழ்ச்சிகள்

கிளிநொச்சி,நவ.12

பூநகரி முகாமை மீட்பதற்காக 93ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 'தவளைப்பாய்ச்சல்' நடவடிக்கையின் ஒன்பதாவது ஆண்டு வெற்றி விழா நேற்று வன்னியில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பூநகரி வாடியடிச் சந்தியில் நேற்றுக்காலை முதல் இரவு வரை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இத்தாக்குதல் நடவடிக்கையில் மரணித்த மாவீரர்களின் நினைவாக அங்கு அமைக்கப்பட்ட நினைவாலயம் திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி அரச அதிபர் எஸ். இராசநாயகம் பொதுச்சுடரேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் கிளிநொச்சி கல்விப்பணிப்பாளர் வி.அரியரத்தினம், பூநகரி வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் எஸ். தங்கராசா ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்.

தொடர்ந்து பல நிகழ்ச்சிகள் இரவு வரை இடம்பெற்றன. (ம-3)

# 500 பேருக்கு சிகிச்சை

யாழ்ப்பாணம்,நவ.12

தீவக லயன்ஸ்கழக ஏற்பாட்டில் புளியங்கூடல் நடராசா வித்தியாசாலையில் நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாமில் சுமார் 500 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாகக் கழகத் தலைவர் லயன் ப. தேவநாயகம் தெரிவித்தார்.

கண்பரிசோதனை செய்யப்பட்டவர்களில் 50 பேருக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகளும் வழங்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார். (ம)

# தமக்குத் தனி அலகு வேண்டும் என்று கிழக்கு முஸ்லிம்கள் கேட்கவில்லை!

### அமைச்சர் முஹம்மது கூறுகின்றார்

கொழும்பு,நவ.12

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் காலம்காலமாக தமிழ் மக்களுடன் சகோதரத்துவமாக வாழ்ந்தது போலவே தொடர்ந்தும் வாழவிரும்புகின்றனர். அவர்கள் ஒருபோதும் முஸ்லிம்களுக்கு எனத் தனியான ஓர் அலகு தேவையென்று கேட்கவும் இல்லை; அதற்கு ஆசைப்படவும் இல்லை.

- இப்படி வெளிப்படையாகக் கூறினார் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் எம்.எச்.முஹம்மது.

அண்மையில் கிழக்கு மாகாண மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டபோதே இந்தஉண்மையை தாம் அறிந்து கொள்ளமுடிந்தது என்று அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திற்கு வெளியே நாட்டின் ஏனைய பகுதிகளில் 70 வீதமான முஸ்லிம்கள் பரந்து வாழ்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள் தென்பகுதிகளிலும் மேல் மாகாணத்திலும் காணிகளை வாங்கி வீடுகளைக் கட்டி நிரந்தரமாக வாழ்கின்றனர்.

முஸ்லிம்களுக்கு என தனியான அலகு தேவையென்ற கோரிக்கையை முன்வைப்பதற்கு முன் தென்பகுதியில் வாழும் 70 வீதமான முஸ்லிம்களுடன் கலந்தாலோசிக்கவும் அவர்களுடைய கருத்தை அறியவும் சம்பந்தப்பட்டோர் தவறிவிட்டனர் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். வரவு - செலவுத்திட்ட உரைமீதான நான்காவது நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கிழக்கு மாகாணத்திற்கு வெளியே 70 வீதமான முஸ்லிம்கள் சிங்கள மக்களுடன் இணைந்து சகோதரத்துவத்துடன் வாழ்கிறோம். திடீரென கிழக்கு முஸ்லிம்களுக்கு தனியான ஓர் அலகு என்று கூறும்போது தென் பகுதியில் வாழும் முஸ்லிம்களின் நிலைமை பற்றியும் சிந்திக்கவேண்டும். வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு வெளியே வாழும் முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகள், பாரம்பரியம், கலாசாரம் என்பன பற்றியும் தீர்க்கதரிசனத்துடனும் சிந்திக்க வேண்டும்.

எனவே, நடைபெறவிருக்கும் பேச்சுக்களின்போது கிழக்கு மாகாணத்திற்கு வெளியே வாழும் 70வீதமான முஸ்லிம்களையும் கருத்திற்கொண்டு பொருத்தமான ஒரு நபரையோ அல்லது நபர்களையோ பிரதிநிதியாக இணைத்துக்கொள்ளவேண்டும் என அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் வேண்டுகோள் ஒன்றை விடுக்கிறேன்.

தென்பகுதியில் வாழும் முஸ்லிம்கள் இங்கு பெரும்பான்மையாக வாழும் சிங்களவர்களுடன் புரிந்துணர்வுடனும் நட்புடனும் வாழ்கின்றனர். அதேபோன்று வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் தமிழர்களுடன் ஏன் இணைந்துவாழ முடியாது என்பதை என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை.

எனவே, கடந்தகால கசப்பான - விரும்பத்தகாத - சம்பவங்களை மறந்து தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையில் புதிய இணைப்பை ஏற்படுத்துவோம். நல்லெண்ணத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதன் மூலம் இரு சமூகங்களுக்கிடையில் அசைக்கமுடியாத நட்புறவை ஏற்படுத்துவோம். இந்த ஒற்றுமையின் மூலமே நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு இணைந்து தீர்வுகாண முடியும்.

கடந்த 20 வருடகால யுத்தக் கொடுமைகளை சகல இன மக்களும் அனுபவித்து விட்டோம். இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தார். பல்வேறு இடர்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியிலேயே பிரதமர் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கிறார். எனவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்படவேண்டும்.

இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களும் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளன. நாட்டுமக்கள் மத்தியில் நிம்மதி ஏற்பட்டுள்ளது.

சர்வதேச சமூகத்தினதும் முதலீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரித்துள்ளது. இதனால் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கோடி கோடியாக உதவ முன்வந்துள்ளன.

இந்நிலையில், நீண்ட தூரநோக்குடன் நிதி அமைச்சரால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த வரவு - செலவுத் திட்டம் நாட்டின் அபிவிருத்தியை கட்டியெழுப்பும் என்பதில் சந்தேகமில்லை.

- என்று அமைச்சர் முஹம்மது கூறினார். (ம)

# யாழ்.மக்களின் மருத்துவ தேவையை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கை!

## தாய்வான் நாட்டு சுகாதார அமைச்சர் வாக்குறுதி

யாழ்ப்பாணம்,நவ.12

யாழ்.மக்களின் மருத்துவ தேவைகள் இனங்காணப்பட்டு, அவற்றை நிவர்த்திசெய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு தெரிவித்தார் தாய்வான் நாட்டின் சுகாதார அமைச்சர் சூ ரி சூயு (Shu Ti Chiou).

தாய்வான் நாட்டின் சுகாதார அமைச்சர் தலைமையில் அந்நாட்டின் பிரபல மருத்துவமனைகளைச் சேர்ந்த கண் சத்திரசிகிச்சை நிபுணர்கள் அடங்கிய மருத்துவக் குழு ஒன்று கண் சிகிச்சை முகாமை நடத்தும் பொருட்டு நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்தது.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் வருகை தந்த இந்தக் குழுவினர் தமது விஜயம் தொடர்பான தகவல்களைத் தெரிவிக்கும் வகையில் 'உதயன்' கேட்போர் கூடத்தில் செய்தியாளர் மாநாடொன்றையும் நடத்தினர். இந்த மாநாட்டுக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே தாய்வான் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கும் தாய்வானுக்கும் இடையில் மருத்துவ ரீதியிலான சேவைகள் தற்போது முதற்தடவையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தச் சேவைகள் தொடர்ந்தும் நடைபெறுவதற்கு ரோட்டறிக் கழகங்கள் முதலிய அமைப்புக்கள் ஆதரவு வழங்க வேண்டும்.

யாழ்.மக்களுக்கு மிகவும் அவசியமானதென இனங்காணப்பட்ட கண் சத்திரசிகிச்சை முகாமை நடத்துவதற்கென அதிநவீன கருவிகள், மருந்து வகைகள் மற்றும் உபகரணங்கள் சகிதம் நாம் இங்கு வருகை தந்துள்ளோம்.

15 கண் வைத்திய நிபுணர்கள் இந்த மருத்துவ முகாமை நடத்துவர். நோயாளர்கள் தீவிரமான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை மேற்கொள்ளப்படும். ஐந்து நாள்கள் இங்கு தங்கியிருக்கும் நாம் சுமார் 250 இற்கும் மேற்பட்டோருக்கு சிகிச்சை அளிக்க எண்ணியிருக்கின்றோம்.

இந்த கண் சத்திரசிகிச்சை முகாமுக்கு இலங்கை நாணயத்தின் படி சுமார் இரண்டரைக்கோடி ரூபா செலவாகும் என நாம் மதிப்பிட்டிருக்கின்றோம்.

மருத்துவ ரீதியாக யாழ்குடாநாட்டு மக்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவிப்பதாக பலராலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, நாம் நாடு திரும்பியதும் தாய்வான் மத்திய அரசின் கவனத்துக்கு யாழ்மக்களின் மருத்துவ தேவைகள் குறித்து விரிவாக எடுத்துக்கூறுவோம். இதன் பின்னர் மருத்துவ உபகரணங்களையோ, மருந்துவகைகளையோ ஆஸ்பத்திரிகளுக்கு அன்பளிப்பாக வழங்குவது பற்றிக் கவனம் செலுத்தப்படும் - என்றார்.

இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் பற்றி தாய்வான் நாட்டின் அமைச்சர் என்ற ரீதியில் தங்களின் சொந்த கருத்து என்ன? என செய்தியாளர் ஒருவர் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அவர், தற்




போதைய விஜயம் அரசியல் ரீதியானது அல்ல. சேவையை அடிப்படையாகக் கொண்டது. எனினும், சமாதானத்துக்கான தற்போதைய முன்னெடுப்புக்கள் வெற்றிபெறும் - வெற்றி பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எனக்கு உண்டு - என்றார்.

மேற்படி செய்தியாளர் மாநாட்டில் தாய்வான் தாய்பேய் நகர சுங் - ஹசிங் ஆஸ்பத்திரியின் சுப்பிரின்டென்ட் வைத்திய கலாநிதி லின் சுவ்லவுவ், தாய்பேய் வுஜுங் ரோட்டறிக் கழகத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி ஜொசெபியன் வொவ் மற்றும் கொழும்பு கிழக்கு ரோட்டறிக் கழகத்தின் தலைவர் பேர்னி டோல், கண்டி மெற்றோபொலிரன் ரோட்டறிக் கழகத்தின் தலைவர் சிவசுப்பிரமணியம் ஆகியோரும் -

குடாநாட்டில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளின் செய்தியாளர்களும் தென் இலங்கை செய்தி ஊடகங்களின் செய்தியாளர்களும் கலந்து கொண்டனர்.

முன்னதாக நேற்றுக்காலை 9.30 மணியளவில் யாழ்வருகை தந்த இவர்களை வரவேற்கும் நிகழ்வு 'உதயன்' அலுவலகத்தில் நடைபெற்றது.

மேற்படி குழுவினரை யாழ்.மாநகர முதல்வர் செ.கந்தையன், 'உதயன்', 'சுடரொளி' பத்திரிகைகளின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் மற்றும் யாழ்.ரோட்டறிக் கழக உறுப்பினர்கள் மாலை அணிவித்து வரவேற்றனர். இந்தக் குழுவினருடன் கொழும்பு கிழக்கு ரோட்டறிக் கழகம், கண்டி மெற்றோ பொலிரன்ரோட்டறிக் கழகம் ஆகியவற்றின் தலைவர் மற்றும் உறுப்பினர்களும் வந்திருந்தனர்.

தொடர்ந்து 'உதயன்' கேட்போர கூடத்தில்' நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றிலும் அமைச்சரும், வைத்திய நிபுணர்களும் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து யாழ்.ஆஸ்பத்திரியில் மேற்படி குழுவினர் நடத்தும் கண் சத்திரசிகிச்சை முகாம் ஆரம்பமானது. யாழ்.ஆஸ்பத்திரியின் கண் சத்திர சிகிச்சை நிபுணர் எஸ்.குகதாசன் சிகிச்சைக்கான நோயாளர்களைத் தெரிவுசெய்திருந்தார்.

கொழும்பு கிழக்கு ரோட்டறிக் கழகம், கண்டி மெற்றோ பொலிரன் ரோட்டறிக் கழகம், யாழ்.ரோட்டறிக் கழகம் என்பன ஒன்றிணைந்து இந்த மருத்துவ முகாமை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## நேற்று 15 பேருக்கு கண் சத்திர சிகிச்சை

யாழ்ப்பாணம்,நவ.12

தாய்வான் நாட்டின் சுகாதார அமைச்சர் சூ ரி சூயு தலைமையில் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த கண் சத்திர சிகிச்சை நிபுணர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் 'கண் சத்திர சிகிச்சை முகாமினை' ஆரம்பித்தனர். நேற்றைய தினம் 15 பேர் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர். எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இக் கண் சத்திரசிகிச்சை முகாம் நடத்தப்படவுள்ளது.

நண்பகல் 12 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்ற நிபுணர்கள் குழு கண் நோயாளர்களின் பூர்வாங்க நோய் அறிக்கையினை பரிசோதித்து உறுதிப்படுத்தினர்.


பிற்பகல் 2 மணியளவில் 15 பேருக்கு கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இக் கண் சத்திர சிகிச்சை முகாமின் மூலம் சுமார் இரு நூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயனடைவர் என தெரிவிக்கப்பட்டது.

(ஓ-8-9-12-15)

## யாழ்ப்பாணத்தில் தாய்வான் குழுவினர்.....











# இன்னும் நூறு பேர் ஏறினாலும் இந்த சீற் உடையறது என்றது பொய்!





அன்றிலிருந்து மக்களின் அபிமானத்தை வென்று உறுதியின் மறுவடிவமாக
என்றும் முன்னணியில் திகழும்...

## யானை மஸ்கனைட்

கூரைக்கும் சீலிங்கிற்கும்

## உறுதியின் மறுவடிவம்

அஸ்பெஸ்டஸ் சிமென்ற் இன்டஸ்ரீஸ் லிமிட்டட்.

மஸ்கன்ஸ் லிமிட்டட்.
175 ஸ்ரீ சுமணதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு 12.
தொலைபேசி: 325561-3

விநியோகத்தர்கள்:
மற்றும் நாடளாவிய கிளைகள்

பில்டிங் மற்றீரியல் கோப்பரேசன் லிமிட்டட்.
541 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு12.
தொலைபேசி: 326701-5

உதயன்

## பல்கலைக்கழக பயங்கரவாதம்

தெற்கில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் 'பல்கலைக்கழகப் பயங்கரவாதம்' அரங்கேறியிருக்கின்றது. தனது கொடூர முகத்தைக் கடந்த வியாழனன்று பல்கலைக்கழக வளாகத்துக்குள் இந்தப் பயங்கரவாதம் காட்டியதைப் பார்த்து கல்வி உலகம் மட்டுமல்லாமல் முழு நாடுமே உறைந்து போயிருக்கின்றது.

பல்கலைக்கழகக் கல்விக்கே பெரும் ஊறு விளைவிக்கும் 'ராகிங்' கொடூரம், பல்கலைக்கழகச் சமூகத்தை ஆட்டிப்படைத்து, உயர் கல்விச் சமூகத்தைக் கேவலப்படுத்தி வருகின்றது. அதற்கு எதிராகப் புறப்பட்ட - சமூகநலனோடு செயலாற்ற முனைந்த - மாணவத் தலைவர்களே கொடூரமான முறையில் அடித்துத் தாக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொருவர் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றார். மேலும் பத்துப் பேர் படுகாயமுற்றிருக்கின்றார்கள்.

'ராகிங்' பிசாசின் அடாவடித்தனம் குறித்து பல்கலைக்கழக நிர்வாகிகள் விசாரணை நடத்திக் கொண்டிருந்த சமயம் தடிகள், பொல்லுகள் சகிதம் விசாரணை அறைக்குள் புகுந்த 'பல்கலைக்கழகப் பயங்கரவாதிகள்', காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை நடத்தியிருக்கின்றார்கள்.

தாக்குதலினால் குற்றுயிரும் குலையுயிருமாய்க் கிடந்த மாணவர்களை அவசர சிகிச்சைக்குக் கொண்டுபோக முயன்ற பல்கலைக்கழக நிர்வாகிகளை அச்சுறுத்தித் தடுத்திருக்கின்றார்கள். அதற்கு மேல், படுகாயமுற்ற நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்து விரையப்பட்ட மாணவன் ஒருவனை மீண்டும் வழிமறித்துத் தாக்கியிருக்கின்றார்கள்.

இவை அனைத்தும் பல்கலைக்கழக மாணவர்கள் என்ற பெயரில் நடத்தப்பட்ட வெறியாட்டம். 'ராகிங்' என்ற பிசாசின் ஆதிக்கத்தில் மூழ்கியதால் எழுந்த போதையின் மிடுக்கு.

தென்னிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களைத் தனது கைகளில் வைத்துப் பந்தாடும் ஒரு சிங்களத் தீவிரவாதக் கட்சியின் வன்முறைப் போக்கின் மற்றொரு வெளிப்பாடே இந்த அராஜகம்.

உயர்கல்வி கற்கும் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் இருந்து சுதந்திரமான கருத்துப் போக்கு வெளிப்பட்டுவிடக்கூடாது என்பதில் முனைப்பாக இருக்கும் இந்த சக்தி, கடந்த ஒரு தசாப்தகாலமாக அத்தகைய போக்குக்குகெதிராகத் தன்னுடைய அச்சுறுத்தல் ஆயுதத்தை லாவகமாகப் பிரயோகித்து வந்திருக்கின்றது.

கடந்த வியாழன் கொடூரத் தாக்குதலை நடத்திய 'பயங்கரவாதக் கும்பலில்', பல்கலைக் கழகங்களின் மாணவர் சம்மேளனத்தின் கை நேரடியாக இருந்ததாகக் கூறப்படுகின்றது. சம்பந்தப்பட்ட பேரினவாத - தீவிரவாத - கட்சியின் ஒரு முகமாகவே இந்தப் பல்கலைக்கழகங்களின் மாணவர் சம்மேளனம் இயங்கிவருகிறது என்பது ஊரறிந்த இரகசியம்.

பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி பயிலும் தமிழ் மாணவர்கள் மத்தியிலும் இத்தகைய 'ராகிங்' வேதாளம் குடிகொண்டிருக்கத் தவறவில்லை. அதன் விளைவாக பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல்பீட மாணவன் வரப்பிரகாசை நாம் இழக்கவேண்டி ஏற்பட்டது.

அதன் பின்னர், தமிழ் மாணவர்கள் மத்தியில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. அங்கொன்றும் இங்கொன்றுமாக சில சம்பவங்கள் நடைபெறாமல் இல்லை. என்றாலும் சமூகத்தை 'இயக்கத்தக்கவர்கள்' கண்கொத்திப் பாம்பாகக் கவனித்துக் கொண்டிருப்பதால் 'ராகிங்' அரக்கன் யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய இடங்களில் உள்ள தமிழர்களின் பல்கலைக்கழகங்களில் மீண்டும் தலையெடுக்க முடியாமல் நசுண்டிக்கப்பட்டிருக்கின்றான்.

தெற்கில் 'இயக்கத்தக்கவர்கள்' போன்ற அமைப்புகள் இல்லை. பொலீஸார்மூலமே குற்றவாளிகளைச் சட்டத்தின்முன் நிறுத்தவேண்டும். அப்படி நிறுத்தினாலும் சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி குற்றவாளிகள் தப்பிவிடவும் அதிக வாய்ப்புகள் உண்டு.

எனவே, பொதுமக்கள் பொங்கி எழுந்து இத்தகைய அராஜகங்களுக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும். பொதுமக்கள் சக்தி தமக்குப் பின்னால் இருப்பதை உறுதிப்படுத்தினால்தான் இத்தகைய பயங்கரவாதங்களுக்கு எதிரான மாணவர்களின் நியாயமான போராட்டம் - தலைகுனியாமல் - வெல்லும்.

# பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்கள் செயலகத்து குப்பைத் தொட்டியில்!

## ஊழியரின் மெத்தனம் காரணமாம்

யாழ்ப்பாணம்,நவ.12

யாழ்.செயலகத்தில் உள்ள மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவு போன்றவற்றுக்கான சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் சரிவரப் பேணப்படாதுள்ளதாகக் கூறப்படுகிறது.

இச்சான்றிதழ்கள் செயலகக் கட்டடத்தின் வெளிப்புறத்திலும், குப்பைத் தொட்டிகளிலும் காணப்படுவதாக அங்கு சென்று திரும்பும் மக்கள் தெரிவிக்கின்றனர். பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றுவோர் மேற்படி பதிவுச்சான்றிதழ்களைப் பேணுவதில் அக்கறை காட்டாததே இதற்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

மூலச்சான்றிதழ் புத்தகங்களில் இருந்து கழன்று விழும் பதிவுச்சான்றிதழ் தாள்களை ஊழியர்கள் அப் புத்தகங்களில் மீளக் கட்டவோ பொருத்தவோ முயற்சிக்காது அவற்றைக் குப்பைகளோடு வெளியே தள்ளிவிடுவதாகக் கூறப்படுகிறது.

தவறிவிழும் சான்றிதழ்களை புத்தகமாகக் கட்டுவதற்கு புத்தகம் கட்டுவோர் இருவர் அங்கு கடமையில் உள்ள போதும் இந்த நிலைமை [illegible]றது. 48ஆம் ஆண்டுமுதல் சமீபத்தில் 85ஆம் ஆண்டு வரை[illegible] காலத்தில் பதியப்பட்ட சான்றிதழ்கள் செயலகத்தின் [illegible]க் கிடப்பதை அவதானிக்க முடிகிறது.

பல்வேறு தேவைகளுக்காக[illegible]ம் இச்சான்றிதழ்கள் தேவைப்படும் நிலையில் அவற்றைப் பேணு[illegible]வதில் ஊழியர்கள் அசிரத்தை காட்டுவது குறித்து பொதுமக்கள் [illegible]ல் விசனம் தெரிவிக்கப்படுகிறது. மூலச்சான்றிதழ் சே[illegible]ந்தாலோ அல்லது தொலைந்துபோனாலோ கொழும்பில் உ[illegible] தலைமையகத்திடமிருந்து பதிவாளர் அலுவலகத்தினர் பிரதிக[illegible]ளப் பெற்று மூலச்சான்றிதழாகப் பயன்படுத்துவது நடைமுறை. ஆனால், இப்பணியும் நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக ஆமை வேகத்திலேயே நடைபெறுகிறது.

இத்தகைய நிலையில் சான்றிதழ்களைப் பே[illegible]ணுவதிலாவது ஊழியர்கள் அதிக அக்கறை காட்டவேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

## எழுதுமட்டுவாழ் - மிருசுவில் பகுதியில்

# முகாமிருந்த இடத்தில் மண்டையோடு மீட்பு!

கொடிகாமம்,நவ.12

எழுதுமட்டுவாழ் - மிருசுவில் படித்தமகளிர் குடியேற்றத்திட்டப் பகுதியில் சீருடையினரின் முகாம் இருந்த இடத்தில் மனித எலும்புகள் மீட்கப்பட்டுள்ளன.


இப்பகுதியில் கடந்த இரண்டு வருடங்களாக சீருடையினர் முகாமிட்டிருந்தனர். அப்பகுதியில் வசித்த மக்கள் இடம்பெயர்ந்து வேறிடங்களில் தங்கியிருந்தனர்.

கடந்த மாதம் 10ஆம் திகதி இப்பகுதியில் 40 குடும்பங்களை மீளக் குடியமர அனுமதி வழங்கப்பட்டது. இதனையடுத்து மீளக்குடியமரச் சென்ற சின்னத்தம்பி செல்வநாயகம் என்பவரின் வீட்டுக்காணி துப்புரவு செய்யப்பட்டபோதே மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டன.

துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டபோது மனிதனின் கால் பகுதி எலும்பு முதலில் காணப்பட்டது. தொடர்ந்து துப்புரவு செய்யப்பட்டபோது மனித மண்டையோடு ஒன்று மீட்கப்பட்டது.

இதனையடுத்து மேலும் அங்கு மனித எச்சங்கள் இருக்கலாம் என்ற அச்சத்தின் காரணமாகத் துப்புரவுப் பணி இடைநிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் 40 குடும்பங்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டபோதும் 30 குடும்பங்களின் இருப்பிடங்களில் இருந்தே சீருடையினர் வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஒ-74)



## 'யுனெஸ்கோ' குழு யாழ்.விஜயம்

'யுனெஸ்கோ' நிறுவனத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழுவொன்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ளது.

இக்குழுவினர் நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ்செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்துக் கலந் துரையாடினார்கள்.

குடாநாட்டின் வரலாற்றுப் பதிவுகள் மற்றும் சான்றுகள் என்பவற்றை ஆவணப்படுத்தி வைப்பதற்கான வசதிகளைப் பொது நூலகத்துக்கு ஏற்படுத்தித் தருமாறு அரச அதிபரினால் மேற்படி பிரநிதிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதுபற்றி ஆவன செய்வதாகத் தெரிவித்த பிரதிநிதிகள் நூலகத்துக்கு ஒருதொகுதி நூல்களை வழங்குவதாகவும் உறுதியளித்தனர்.

இதனைத் தொடர்ந்து பொதுநூலகத்துக்குச் சென்று பார்வையிட்ட இக்குழுவினர் நயினாதீவுக்கும் சென்றனர். இன்று கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தையும் சென்று பார்வையிடவுள்ளனர். (ஒ-10)

## இராணுவ ஆக்கிரமிப்பால் இப்படியும் ஒரு பிரச்சினை

வலி.வடக்கு,நவ.12

இராணுவத்தால் எல்லைகள் அழிக்கப்பட்ட காணிகளுக்கு எல்லைவேலி அமைப்பதில் காணிச் சொந்தக்காரர்களிடையே ஏற்பட்ட பிணக்கு அடிதடியில் முடிந்துள்ளது.

அரியாலை ஆனந்தன்வடலி வீதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

முன்னர் காணிகள் உரியமுறையில் கணக்கிடப்படாமல் கால் அளவுகளைக் கொண்டே கணக்கிடப்பட்டு காணி உறுதிகள் எழுதப்பட்டன.

இந்த நிலையில் இடம்பெயர்வுக் காலத்தில் இராணுவத்தால் பல காணிகளின் எல்லைகள் அழிக்கப்பட்டன. தற்போது மக்கள் மீளக்குடியமர்ந்ததைத் தொடர்ந்து எல்லைவேலிகள் அமைக்கும் வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக நில அளவையாளர்மூலம் அளவிடும்போது காணி எல்லைகள் வேலி தாண்டிச் செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து பக்கத்துக் காணி உரிமையாளர்கள் தமது காணியைப் பிடித்துவிட்டார்கள் என சண்டைக்குப் போகின்ற சம்பவங்களும் ஆங்காங்கே ஏற்படுகின்றன. இத்தகைய ஒரு சம்பவமே ஆனந்தன் வடலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

(ஒ-86)

### நாளை

ஐப்பசி 27
புதன்கிழமை
(13.11.2002)
திதி : நவமி
முன்னிரவு 8.33 வரை.
நட்சத்திரம்: சதயம்
முழுவதும்
சுபநேரம் : 4.37 - 6.07
ராகுகாலம்: 12.07 - 1.37
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள். திட்டம் எதுவும் தேவையில்லை. அதனால் ஆகப்போவதும் ஒன்றுமில்லை.

## சாவகச்சேரி கடைகளுக்கு ஞாயிறுவிடுமுறை கட்டாயம்

### வணிகர் கழகம் அறிவிப்பு

சாவகச்சேரியில் இயங்கும் வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு எதிர்வரும் 17ஆம் திகதி தொடக்கம் ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை வழங்கப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி வணிகர்மன்ற எல்லைக்குள் உள்ள அத்தியாவசிய வணிக நிலையங்கள் தவிர்ந்த ஏனைய வணிக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கே ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை வழங்கப்படவுள்ளது. அத்தியாவசிய வணிக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு வாரத்தில் ஒருநாள் விடுமுறை வழங்கப்படவுள்ளது. சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் ந.சற்குணராசா வணிக நிலைய உரிமையாளர்களுக்கு இதற்கான அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

கடந்த ஆறு மாதங்களாகவே இப்பகுதியில் வணிக நிலையங்கள் மீள இயங்குவது குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## மிருசுவில் தேவாலயத்திலும் திருச்சொரூபங்கள் திருட்டு!

கொழும்புத்துறை,நவ.12

மிருசுவில் புனித நீக்லஸ் தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் பக்தர்கள் வணங்கி வந்த இரு திருச்சொரூபங்கள் இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளன.

புனித நீக்லஸ் திருச் சொரூபம், புனித அந்தோனியார் திருச்சொரூபம் ஆகிய இரண்டுமே திருடப்பட்டுள்ளன.

அதேவேளை, நேற்றுமுன்தினம் ஊர்காவற்றுறை, கரம்பன் புனித அன்னம்மாள் ஆலயத்திலும் திருச்சொரூபம் களவாடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இதுவரை யாழ்.குடாநாட்டில் 10இற்கும் மேற்பட்ட கிறிஸ்தவ திருச்சொரூபங்கள் தேவாலயங்களில இருந்து மாயமாக மறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஒ-30)

## தடுக்கப்பட்ட மீனவரில் இருவருக்கு கடலுக்குச் செல்ல அனுமதி!

பாஷையூர் கடற்பகுதியில் கடந்த 25 நாள்களுக்கும் மேலாக மீன்பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டிருந்த 5 மீனவர்களில் இருவருக்கு தற்போது கடலுக்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளுக்கான ஐ.நா.அதிகாரிகள் மீனவர்களுக்கு கடலுக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டமை தொடர்பாக விசாரணை மேற்கொண்டனர். இதனையடுத்தே தொழிலுக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்தகவலை பாஷையூர் கடற்தொழிலாளர் தெரிவித்துள்ளனர். (ஒ-30)

## ஆசிய ஆயர் பேரவை செயலாளராக மீண்டும் கொழும்புப் பேராயர்

கொழும்பு பேராயர் மேதகு ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை ஆசிய ஆயர் பேரவையின் செயலாளர் நாயகமாக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஏற்கனவே இப்பதவியை வகித்த இவர், இப்பதவிக்கு தற்போது இரண்டாவது தடவையாக நியமனம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(எ-51)

# கோப்பாய் மத்திய பகுதியில் திருட்டு முயற்சி முறியடிப்பு!

கோப்பாய், நவ.12

கோப்பாய் மத்திய பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டது.

இத்திருட்டு முயற்சியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சிறுவனும் மற்றும் நடுத்தர வயது மதிக்கதக்க நபரும் பிடிக்கப்பட்டு கோப்பாய் பொலீஸாரிடம் கோப்பாய் மத்தி கிராம அலுவலர் ஊடாகக் கையளிககப்பட்டனர். இந்த இருவருடனும் வந்த வேறு சிலர் தப்பிவிட்டதாகக் கூறப்பட்டது. இவ்வாறான திருட்டு முயற்சிகள் கோப்பாய், நீர்வேலி பகுதிகளில் நீண்டகால இடைவெளிக்கு பின் மீண்டும் தலைகாட்டத் தொடங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் திருட்டுக் கும்பல் ஒன்று கோப்பாய் மக்களிடம் சிக்கியதைத் தொடர்ந்து திருட்டுச் சம்பங்கள் குறைந்திருந்தன. தற்போது மீண்டும் திருட்டுகள் இப்பகுதியில் பரவலாக இடம்பெற ஆரம்பித்துள்ளன. (ஒ-72)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 22 - 04 - 1931



விண்ணில் 05 - 10 - 2002

### அமரர் சிவசுப்பிரமணியம் மூத்ததம்பி

(Rtd. R.M.O)

**அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.**

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சிவசுப்பிரமணியம் மூத்ததம்பி அவர்களின் இறுதிக்கிரியைகளில் நேரடியாகக் கலந்துகொண்டோருக்கும், தொலைபேசி மூலமும் கடித மூலமும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன், எதிர்வரும் 14.11.2002 (வியாழக்கிழமை) எமது இல்லத்தில நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம.

*'ஹேமவாசா',*
*8 ஆம் கட்டை,*
*தெல்லிப்பழை.*

(10458)

அன்னாரின் பிரிவால் வாடும்:
-குடும்பத்தினர்-

## நெற்பயிர்களை வெட்டி சேதமாக்கும் நண்டுகள்

சண்டிலிப்பாய், நவ.12

நவாலி, மானிப்பாய் மற்றும் கட்டுடைப் பகுதிகளிலுள்ள நெற்காணிகளில் நெற்பயிர்களை நண்டுகள் வெட்டி சேதமாக்கி வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இம்முறை பல நெற்காணிகளில் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் நெற்பயிர்கள் வளர்ச்சியடைந்து வருகின்றன. இந்தநேரத்தில் நண்டுகளினால் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-135)

## ஈச்சமோட்டை கடற்கரை வீதியைப் புனரமைக்க நடவடிக்கை

அரியாலை,நவ.12

ஈச்சமோட்டையில் இருந்து கடற்கரைக்குச் செல்லும் வீதி புனரமைக்கப்படவுள்ளது.

தற்போது மேற்படி வீதியைப் புனரமைக்கும் முதற்கட்ட நடவடிக்கையாக கற்கள் பறிககப்பட்டு வருகின்றது.

கடந்த பல வருடங்களாக இந்த வீதி புனரமைப்புச் செய்யப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (எ-17)

## ஓராண்டு நினைவஞ்சலி



### மாணிக்கம் சீனியர்

பாரில் 25-04-1918 பரம அழைப்பில் 10-11-2001

**இரட்சிப்பின் பாதையினை**
**இவ்வுலகில் தெரிந்து கொண்டு**
**சத்தியரின் சமூகத்திலே**
**நித்தியமாய் இருக்கின்ற உங்களை**
**நாமும் ஒருநாள் சந்திப்போம்!**
***நீங்கள் மரித்தீர்கள் உங்கள் ஜீவன்***
***கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.***

இன்று (12.11.2002) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நினைவுதின ஆராதனை இடம்பெறும்.

*உடுப்பிட்டி வீதி,*
*தொண்டமானாறு.*

(10508)

தகவல்:
பிள்ளைகள்.


இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை விடுதலைப் புலிகள் கைவிட்டு விட்டார்களா?

குடாநாட்டில் துப்பாக்கிகள் இன்னும் ஓயவில்லை

கொழும்பு - யாழ்.சேவைக்கு போட்டிபோடும் விமான நிறுவனங்களும் பீதியூட்டும் தகவல்களும்

7 ஆண்டுகளுக்குப் பின்னர் மாவீரர் தினத்துக்கு தயாராகும் குடாநாடு




மற்றும் விறுவிறுப்பான அம்சங்கள்

உதறித்தள்ளிய வைகோவை அரவணைக்கலாமா கலைஞர்.
தி.மு.கவினர் குழப்பம், ஸ்டாலின், அழகிரி கலக்கம்

தமிழர்கள் சம்பந்தப்பட்ட சட்டம் புலிகளின் சம்மதத்துடன்தான் வரும்
- தேரடி -

நான் ரெடி....
நீங்கள் ரெடியா?
- நகைச்சுவை விருந்து -

வவுனியா பெண் படுகொலை ஏற்படுத்தும் சந்தேகங்கள்

12-11-2002 இதழில்

சுடர் ஒளி

விலை - 14/-

(C/24828)

# ஒத்துப் போகவேண்டிய கட்டாயம் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும்

**தற்போது நாட்டில் உருவாகியுள்ள அரசியல் நிலைமைகளின்படி பிரதமர் ரணிலுக்கோ அல்லது ஜனாதிபதி சந்திரிகாவுக்கோ தன்னிச்சையாக எதையும் செய்யமுடியாத நிலை உருவாகியுள்ளது. இன்றுள்ள நிலையில் ஜனாதிபதிக்கு எதிரான ஊழல்கள் மற்றும் குற்றங்கள் மற்றும் ஜனாதிபதியின் பரம்பரையினரின் அரசியல் எதிர்காலம் ஆகியன்வற்றை மனதிற்கொண்டு அவர் அரசுடன் ஒத்துப்போக வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. நாட்டின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்காவிடினும் அரசியல் தலைவர்கள் தங்களது நிலைமைகளைத் தக்கவைக்க வேண்டுமாயின் அரசும் எதிர்க்கட்சியும் இணைந்தேயாக வேண்டும் என்கிறார் "ராவய" பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன். அவரது கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

நாடாளுமன்றத்தின் காலம் ஒரு வருடம் பூர்த்தியான பின்னர் அதனைக் கலைத்து விடுவதற்கான ஜனாதிபதியின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு முயற்சித்தமை, தேவையேற்பட்டால் ஜனாதிபதியை வழிக்குக் கொண்டுவரும் நோக்கத்திலேயாகும். ஆனால், அரசமைப்பில் 19ஆவது திருத்தம் மேற்கொள்வதற்கு உயர் நீதிமன்றம் நிபந்தனைகள் விதித்தமையால் அரசு தனது எதிர்பார்ப்பைக் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் அரசு ஓரளவிற்கு தோல்வியடைந்த நிலையிலேயே உள்ளது. ஜனாதிபதிக்கு இவ்விடயத்தில் வெற்றி கிடைத்திருப்பினும், அவரால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தனது வழிக்குக் கொண்டுவர முடியவில்லை.

தேவை ஏற்படின், படிப்படியாக ஜனாதிபதியைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரக்கூடிய வாய்ப்பு அரசுக்கு இருந்தது. ஆயினும், 19ஆவது திருத்தம் என்ற முட்டாள் தனமான முயற்சியினால் இருந்த அனைத்து வாய்ப்புக்களையும் அரசு பாழடித்துக்கொண்டது. ஜனாதிபதியைத் தோற்கடிப்பதற்கு பிரதமர் ரணிலுக்கு இருந்த வாய்ப்புக்கள் அற்றுப்போனதால், ஜனாதிபதிக்கு குறிப்பிடத்தக்க அளவு வெற்றிவாய்ப்பு நிலை ஏற்பட்ட போதிலும், தாம் விரும்பினால் ரணிலின் அரசுக்கு முட்டுக்கட்டை இடக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டதேயல்லாமல் அரசைத் தோற்கடிக்கக் கூடிய நிலைமை சந்திரிகாவுக்கு கிட்டவில்லை. ஆகக்கூடிய வகையில், தான் முடக்கப்படும் நிலையிலிருந்து தப்பி, அசையாது நிற்கக் கூடிய நிலை வாய்த்தமையையிட்டு சந்திரிகா மகிழ்ச்சி அடையக்கூடும்.

தங்களுக்குள்ளேயே அரசு ஒன்றினை அமைக்கக்கூடிய வாய்ப்பு தமக்குக் கிட்டியுள்ளதாக பொ.ஐ.முன்னணி முட்டாள் தனமாக எண்ணிக் கொள்கிறது. ஈபிடிபி முதல் ஜே.வி.பி வரை, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் பொ.ஐ.முன்னணியிலிருந்து பிரிந்து ஐ.தே.முன்னணியுடன் இணைந்தோர் என எல்லாத் தரப்பினரையும் ஒன்று

## மாற்றார் தோட்டத்திலிருந்து....

சேர்த்தாலும், பொ.ஐ.முன்னணிக்கு 113 ஆசனங்கள் கிடைக்கப்போவதில்லை. இதற்கென மேலதிகமாகத் தேவைப்படும் அங்கத்தவர் எண்ணிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவதாயினும், மனச்சாட்சியின்படி வாக்களிக்கும் உரிமை முறைப்படி சட்டமாக்கப்பட்டால் மாத்திரமே அது சாத்தியமாகும்.

ஒருவரை ஒருவர் அசைக்க முடியாத நிலைமை உருவாகியுள்ள தற்போதைய நிலையில் எதிரெதிர் அணிகளைச் சேர்ந்த இரு தலைவர்களும் தத்தமது கௌரவம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அன்னியோன்யமான விதத்தில் ஒத்துழைப்புடன் செயற்படும் நிலைமையை உருவாக்க முயல்வதே மேற்கொண்டு செய்யக்கூடிய செயலாகும். சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படும்வரை அரசியலில் இருந்து எவராலும் தன்னைத் தோற்கடித்துவிட முடியாதென்பதை பிரதமர் ரணில் நன்கறிவார். அதேபோன்று இச்சமாதான முயற்சிகள் தோல்வியுற்று மீண்டும் பிணக்குகள் ஏற்பட்டாலன்றி தனது எதிரணியைத் தோற்கடிக்கக்கூடிய வாய்ப்புக்கள் தனக்குக் கிட்டாதென்பதனை ஜனாதிபதியும் நன்கறிவார்.

இத்தகைய நிலையில் ஜனாதிபதியும், பிரதமரும் தமக்கிடையே குறிப்பிட்ட ஒரு காலம் வரையில் அரசியல் ரீதியான ஓர் இணக்கப்பாட்டைப் பேண முயல்வதே இவ்விடயத்தில் கடைப்பிடிக்கப்படவேண்டிய அடுத்த நடவடிக்கையாய் அமையும். மீண்டும் விலகிக்கொள்வதற்குப் பொருத்தமான சந்தர்ப்பம் ஏற்படும்வரை தமது தரப்பின் செல்வாக்கை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான தற்காலிக அரசியல் இணக்கப்பாடாக இது அமையும்.

எதிர்க்கட்சியிலிருந்து அரசை நடத்தும் நிலைக்கு வர வாய்ப்பு இருப்பினும், சில துறைகளைப் பொறுத்தவரையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிக்கலான நிலையிலேயே உள்ளார். நாடாளுமன்ற அதிகாரம் இருந்தபோதும் ஜனாதிபதிக்குரிய அதிகாரம் எதிர்க்கட்சியின் வசம் உள்ளது. முப்படைகளுக்குக் கட்டளையிடும் அதிகாரம் ஜனாதிபதியின் கைகளில் உள்ளது.

சமாதான முயற்சிகளுக்கு முழுமையான பாதிப்பை ஏற்படுத்த முடியாவிடினும், பாரதூரமான நஷ்டத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில், சமாதான முயற்சிகளுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய வாய்ப்பு ஜனாதிபதிக்கு உண்டென்பதனை ரணில் நன்கறிவார். மறுபுறம் சமாதான எதிர்ப்பு ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதியின் மறைமுகமான ஆதரவு உண்டென்பதும், அதன் காரணமாக அந்நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன என்பதனையும் ரணில் நன்கறிவார். எதிர்காலத்தில் சமாதான முயற்சிகள் சிக்கல்கள் நிறைந்தனவாக உருவாக வாய்ப்புக்கள் உள்ளன. ஜனாதிபதியுடன் ஓர் அரசியல் இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் ஜனாதிபதியால் உருவாகவுள்ள அரசியல் சிக்கல்களைத் தவிர்க்கமுடியுமென ரணில் அறிந்துள்ளார். ரணிலுக்கு நாடாளுமன்ற அதிகாரம் இருந்த போதிலும், பல கட்சிகளின் கூட்டு மூலம் அரசு உருவாக்கப்பட்டிருப்பதால், பயணிக்கும் வள்ளத்தைப் புரட்டிவிடக்கூடிய ஆற்றல் கூட்டுச் சேர்ந்துள்ள கட்சிகளுக்கு இல்லையாயினும், வள்ளத்தை முன்னோக்கிப் பயணம் செய்யாது தடுக்கும் திறன் அக்கட்சிகளுக்கு உண்டென்பதை ரணில் அறிவார். ஐக்கிய தேசிய முன்னணி ஜனாதிபதியுடன் அரசியல் இணக்கப்பாடு ஒன்றினை ஏற்படுத்திக்கொள்வதன்மூலம் கூட்டுக் கட்சிகளால் பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

ஜனாதிபதி சந்திரிகா இன்று பிரச்சினைகளின் மத்தியிலேயே வாழ்கிறார். நிறைவேற்று அதிகாரம் நீக்கப்படாவிட்டாலும்கூட இன்று அவரது தனித்துவம் பேணப்படவில்லை. தனது தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படுத்த விரும்பும் குழுவினர் தமது கட்சியிலே இருப்பதை அவர் நன்கு அறிவார். பெரிய அளவில் இன்று அவருக்குத் தலைவலி கொடுப்பது அவருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களும் அது தொடர்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணைகளுமாகும். இவற்றில் சில அவருடன் சம்பந்தப்பட்டுள்ள ஊழல் நடவடிக்கைகளுக்கான விசாரணைகளாயிருப்பினும், வேறு சில விசாரணைகள் அவரும் சம்பந்தப்பட்டுள்ளதாகக் கூறப்படும் குற்ற நடவடிக்கைகள் தொடர்பானவையாகும்.

நடைமுறையிலுள்ள அரசமைப்புச் சட்டப்படி, ஊழல் எனக் கருதப்படக்கூடிய தவறு இடம்பெறும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியாகப் பதவி வகிப்பவருக்கெதிராக வழக்குத் தொடுக்க வாய்ப்பு இல்லாதபோதும், இடம்பெற்ற லஞ்சம் மற்றும் ஊழல் குற்றங்களுடன் தொடர்புடைய ஏனையோருக்கு எதிராக வழக்குத் தொடுக்கும் அதிகாரம் இருப்பதோடு, அவ்வழக்கு விசாரணைகளின்போது வெளியிடப்படும் தகவல்கள் ஜனாதிபதியின் கௌரவத்துக்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தக் காரணமாக அமையலாம்.

இந்தவகையில், ஜனாதிபதிக்குப் பெரிய அளவிலான பிரச்சினையாக இருப்பது ஜனாதிபதியின் விசேட பாதுகாப்புப் பிரிவுக்கு எதிரான குற்றச்சாட்டு விசாரணையேயாகும். சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு உண்மையில் இடம்பெற்றிருக்குமாயின் அது ஜனாதிபதியின் அனுசரணையின்றி இடம்பெற்றிருக்க முடியாது. தமக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணைகளை இடைநிறுத்தி வைப்பதற்கு ஜனாதிபதிக்கு இப்போதுள்ள ஒரேயொரு சிறந்த மார்க்கம் ரணிலுடன் தற்காலிகமாக அரசியல் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதேயாகும்.

ஜனாதிபதி மிக முக்கியமானதாகக் கருதும் மற்றொரு விடயம் தன்னுடையதும், தனது பரம்பரையினதும் அரசியல் எதிர்காலம் பற்றியதாகும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை மேலும் தொடருமானால் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் அவர் பதவியில் இருந்து ஓய்வுபெறவேண்டும். இருப்பினும் தனது பிள்ளைகளில் ஒருவரை

*தமிழில்:* **வியெஸ்ரி**

அர சியலுக்கு அறிமுக
தனது மகனையோ அல்
லையோ கட்சித் தலைமை
வைக்கும்வரை தான் அரசிய ல்
நிலைத்திருக்கக் கூடியவகையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையில் மாற்றம் கொண்டுவர ஜனாதிபதி சந்திரிகா எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவியாகப் பிரவேசித்து அதன் பின்னர் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அவர் எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது. தமக்குப் பின்னர் கட்சித் தலைமையை தமது பிள்ளைகளில் ஒருவர் கையில் ஒப்படைக்கும்வரை தான் கட்சியின் தலைவியாக இருந்தாக வேண்டுமென சந்திரிகா எண்ணுகிறார். இடைப்பட்ட காலத்தில் கட்சித் தலைமையை வேறொருவருக்கு வழங்குவது நம்பிக்கையாக அமையாது என அவர் நம்புவதாகத் தெரிகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணக்கப்பாடொன்றினைப் பேணுவதன் மூலம் தனக்கெதிராக தம் கட்சிக்குள்ளிருந்தே செயற்படும் நபர்களின் எதிர்ப்புக்களை நசுக்கிவிடக் கூடிய வாய்ப்பைச் சந்திரிகா பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருக்கும். 19ஆவது திருத்தத்திற்கு ஆதரவளிக்கத் தயாராக சிலர் தமது கட்சிக்குள்ளேயே இருப்பதை அவர் நன்கறிவார். தமக்குப் பின்னர் தமது குடும்பத்தினரைப் புறந்தள்ளிவிட்டு வேறொருவரைக் கட்சியின் தலைவராக்க வேண்டுமென எண்ணியிருக்கும் சிலர் தமது கட்சிக்குள் இருப்பது பற்றியும் அவர் அறிவார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தற்காலிக இணக்கப்பாடொன்றினை ஏற்படுத்துவதன்மூலம் அவசியமற்றவர்கள் மூலம் ஏற்படும் கஷ்டங்களை விலக்கிக்கொள்ளவும், நசுக்கப்படவேண்டியவற்றை நசுக்கி அழிக்கவும் அவருக்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இந்த நிலையில் எதிர்காலத்தில் சந்திரிகா தனக்குச் சவாலாக விளங்கப் போகிறார் என நினைக்கும் ரணில், சந்திரிகாவை ஒரு சிரேஷ்ட அரசியல் தலைவர் எனக் கணிக்கமுடியாத நிலையில் இருப்பது போலவே, ஒரு பேய் மனிதர் என ரணிலை எடைபோட்டிருக்கும் சந்திரிகாவும், ரணில் ஒரு சிரேஷ்ட அரசியல் தலைவர் எனக் கருதக்கூடிய மனநிலை கொள்ள இயலாதிருப்பது தவிர்க்க முடியாததே. அதுமட்டுமன்றி சந்திரிகாவுடன் ஜே.வி.பியினருக்கு ஏற்பட்டிருந்த நட்புறவு குறைவடைந்துவிட்டது. நிகழ்கால விகாரமகாதேவி போன்று ஜே.வி.பியினருக்குத் தோன்றிய சந்திரிகா மீண்டும் பிறப்பெடுத்து வந்திருக்கும் அனுலாதேவி போன்று தோன்றும் நிலை இப்போது ஏற்பட்டுள்ளது.



இந்த அரசியல் இணக்கப்பாடு நாட்டுக்கு நன்மையளிக்கும் விளைவுகளை ஏற்படுத்துமென்பது போன்றே தீமையான விளைவுகளையும் கொண்டுவர வாய்ப்புக்கள் உள்ளன.

குறிப்பிடக்கூடிய பெரிய நன்மையாதெனில் நிறைவேற்று ஜனாதிபதியும் முக்கிய எதிர்க்கட்சியும் இந்தச் சமாதான முயற்சிகளில் சிக்கிக் கொள்ளாத நிலைமை உருவாகாதிருப்பதாகும். இது அரசின் தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு எதிராக உருவாகும் எதிர்ப்பையும் சற்றுத் தணித்துக்கொள்ளக் காரணமாக அமையக்கூடும்.

எதிர்க்க கிகளின் பிரசாரங்கள் பலவீனமடை ம் கடும்கோட்பாட்டுக் கருத்துக்களைக் கொண்ட அமைப்புக்களின் செயற்பாடுகளுக்கு எதிர்க்கட்சியின் தலைமைத்துவம் கிடைக்கப்பெற்று - சந்திரிகாவின் ஆட்சியின் போது இடம் பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தவிர்க்கப்படும் நிலைமை உருவாகக்கூடும். அவ்வாறான நிலைமையில் "அவருக்கு நல்லது எனில் எமக்கு எப்படிக் கூடாததாக இருக்கும்" என்ற எண்ணம் உருவாகி ஆட்சியில் இருப்போர் எதுவித அச்சமும் இன்றி ஊழல்கள் மற்றும் மோசடிகளில் ஈடுபட வாய்ப்புக்கள் உருவாகும். இவைகள் உருவாகவுள்ள தீமைகளில் சிலவாகும். ★

# குடாக்கடல் மீனவர்களுக்கு இடையூறுகள் ஏராளமாம்

குருநகர்,நவ.12


யாழ்.குடாக்கடலில் தொழில் செய்யும் மீனவர்கள் பல இடையூறுகளை எதிர்நோக்கவேண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.

குடாக்கடலில் தொடர்ந்து நான்கு நாள்கள் தங்கித் தொழில்செய்து திரும்ப அனுமதிக்கப்பட்டது. தற்போது அவ் அனுமதி மூன்று நாள்களாகக் குறைக்கப்பட்டுள்ளதாகக் குருநகர் மீனவர்கள் தெரிவித்தனர்.

இம்மாற்ற அறிவித்தல் காரணமாக மீனவர்கள் ஒரு நாள் மட்டுமே கடலில் தங்கி மீன்பிடிக்கக் கூடியதாக உள்ளது. அனுமதி வழங்கப்பட்ட ஏனைய இரண்டு நாள்களும் கடலில் சென்று திரும்ப மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. இதனால் நிம்மதியாக ஓரிடத்தில் தங்கி அதிக நேரம் மீன்பிடிக்க முடியாமலுள்ளது. ஒரு கிழமை தங்கித் தொழில்செய்யும் அனுமதி வழங்கப்பட்டால் மட்டுமே பயனிருக்கும் - இவ்வாறு குருநகர் மீனவர்கள் தெரிவித்தனர்.

தற்போது ஆழ்கடல் மீன்பிடிப்பதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். ஆனால், மீன் பிடிக்க விதிக்கப்பட்ட நாள்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே, அவதியுடன் மீன் பிடித்து கரை திரும்பவேண்டிய கட்டாயத்தை மீனவர்கள் எதிர்நோக்குகின்றனர். இது உடல் உள ரீதியாக மீனவர்களைப் பாதிப்படையச் செய்கிறது.

மேலும், இரவில் கரைதிரும்பும் அனுமதி இல்லாததும் மீனவர்களுக்கு மிகவும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. பகலில் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் தமது தொழிலை முடித்துக்கொண்டு எப்போது விடியும் எனக் காத்து கடலிலேயே நிற்க வேண்டிய சூழ்நிலை நிலவுகிறது. இரவில் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருக்கும்போது மீனவர் எவருக்காவது உடல்நிலை பாதிக்கப்பட்டால் அவரை குருநகர் இறங்குதுறைக்குக் கூட்டிவருவதற்கு அனுமதி பெறுவது மிகுந்த பயத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையாகவே உள்ளது. எனவே, இத்தகைய கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு சுதந்திரமாக தொழில் செய்யும் அனுமதி வழங்கப்பட்டால் மட்டுமே அரசு - புலிகள் செய்துள்ள உடன்பாட்டால் மீனவர்களுக்கு பயனிருக்கும் என குருநகர் மீனவர்கள் அபிப்பிராயம்தெரிவித்தனர். (ஏசி)



புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுவரும் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று எடுக்கப்பட்ட படங்கள் இவை. *படங்கள்:* கொடிகாமம் செய்தியாளர்.

# கொடிகாமம் துயிலும் இல்லம் துரித கதியில் புனரமைப்பு

கொடிகாமம்,நவ.12

கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் புனரமைக்கப்பட்டுவருகிறது.

கடந்தகாலத்தில் ஆயிரத்து 35 மாவீரர்களுக்கு இங்கு கல்லறைகள் கட்டப்பட்டிருந்தன. யுத்த காலத்தில் இக்கல்லறைகள் சீரழிக்கப்பட்டிருந்தன. தற்போது பொதுமக்களின் பங்களிப்புடன் மாவீரர் துயிலும் இல்லம் துரிதகதியில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

மாவீரர் துயிலும் இல்ல நுழைவாயில் மயான அரங்க மற்றும் கல்லறைகள் ஆகியவை புதிதாகக் கட்டப்பட்டுவருகின்றன.

இப்புனரமைப்புப் பணிகளுக்கு உழவு இயந்திங்களையும், உடல் உழைப்பையும் ஏராளமான பொதுமக்கள் இலவசமாக வழங்கி வருகின்றனர். மாவீரர் தினத்துக்கு முன்னதாக துயிலும் இல்லத்தை முன்னைய பொலிவுடன் உருவாக்க பொதுமக்கள் முழுமூச்சுடன் ஒத்துழைப்பு வழங்கிவருகின்றனர்.(ஒ-74)

# ரி.ரி.என். அறிவுச்செல்வம் போட்டி; 2ஆவது சுற்றுக்குத் தெரிவானோர்

ரி.ரி.என். அறிவுச்செல்வம் - 2002 போட்டியின் இரண்டாவது சுற்றுக்குத் தெரிவானோரின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளோரில் முதல் 40 பேரும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

அந்த 40 பேரின் பெயர்கள் வருமாறு:-

மகேஸ்வரன் பிரதீஸ் (சென்.ஜோன்ஸ்), கனஸ்வரன் ராஜீவ்(சென் ஜோன்ஸ்), விநாயகமூர்த்தி சுஜீவன (சென்.ஜோன்ஸ்), சண்முகசுந்தரம் தனராஜி (சென்.ஜோன்ஸ்), சண்முகானநதன் நவதர்சன் (சென்.ஜோன்ஸ்), ஜெகதீஸ்வரன் பிறேம்குமார் (இந்து கல்லூரி), எல்யா ப்ரியதர்ஷினி பிரான்சிஸ (வேம்படி மகளிர் கல்லூரி), கோபால கிருஸ்ணன் நிசாந்தன் (இந்துக் கல்லூரி), மாவண்ணியா சண்முகதாஸ் (வேம்படி மகளிர் கல்லூரி), சிவலிங்கம் சனாதனன் (இந்துக் கல்லூரி), காந்திமதி செல்வராசா (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), இராமச்சந்திரன மாதங்கி (வேம்படி மகளிர் கல்லூரி), புஸ்பரஞ்சன் நடராசா (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), கனகநாயகம் சயந்தன் (இந்துக் கல்லூரி), ஜெரினா தங்கவேலி (வேம்படி மகளிர் கல்லூரி), தயாபரன் நிரஞ்சன் (வைத்தீஸவரா கல்லூரி), சின்னராசா குறிஞ்சி (அச்சுவேலி மத்திய கல்லூரி), சிறிதரன் சிந்துயா (செங்குந்த இந்துக் கல்லூரி), வைரமுத்து இந்துயன் (கனகரத்தினம் மகாவித்தியாலயம்), வல்லிபுரம் பிறிந்தாஜினி (கனகரெத்தினம் மகாவித்தியாலயம்), சிவநேசன் நளாயினி (செங்குந்த இந்துக் கல்லூரி), சுப்பிரமணியம் சிவதர்சன் (கனகரெததினம் மகா வித்தியாலயம்), தம்பிராஜா பிரியந்தி (கனகரெத்தினம் மகா வித்தியாலயம்), ஜெகசோதி அமிதாப (கனகரெத்தினம் மகா வித்தியாலயம்), சுந்திரகுமார் ஸ்ப்னா (கனகரெத்தினம மகா வித்தியாலயம்), சின்னப்பு றொசானாபொடஸ்ரா (சென்.ஜேம்ஸ் மகளிா வித்தியாலயம்), மேரி கிறெமிளா (சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம்), சின்னத்துரை ஜீவனா (சோமஸ்கந்தா கல்லூரி), ஆனந்தகிருஸ்ணன கமல்க்குமார் (சோமஸ்கந்தா கல்லூரி), அடைக்கலம் லட்லி (புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்), சுந்தரலிங்கம் கோகுலறாச் (இந்துக் கல்லூரி), காயத்திரி செல்வரெட்ணம் (வேம்படி மகளிர் கல்லூரி), செல்வம அசோக் (மத்திய கல்லூரி), ஜெயகுணரூபன் ஜெயபியூனா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), தயாணி சிமிஜேன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சுப்பிரமணியன் கேதாரணி (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), சிவனேசன் மயூரன் (மத்திய கல்லூரி), முத்துக்குமாரசாமி லோஜினி (புனித கன்னியர்மடம்), தர்சா இராமச்சந்திரன் (வேம்படி மகளிர் கல்லூரி), சர்மிளா புவனேந்திரன் (வேம்படி மகளிர் கல்லூரி).

மேற்கண்ட 40 பேர் தவிர்ந்த கீழ்க் கழ்க்காணும் அனைவரையும் நாளை புதன்கிழமை காலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்திற்குச் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சன்மினி சிவபாதசுந்தரமூர்த்தி (வேம்படி மகளிர் கல்லூரி), அலுயா மயில்வாகனம் (சுண்டுக்குளி மகளிா கல்லூரி), நர்மதா நாகேஸ்வரராஜா (வேம்படி மகளிர் கல்லூரி), ஜெயகோபி தம்பியப்பா (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), சிவா திலக் (இந்துக் கல்லூரி), தயாபரன் நிறஞ்ச்ன்(வைத்தீஸ்வராக் கல்லூரி), சின்னராஜா குறிஞ்சி (அச்சுவேலி மத்திய மகா வித்தியாலம்), விருந்தவிசகுருக்கள் விக்னேஸ்வரி (சென்.திரேசா கல்லூரி), செல்வேந்திரன் செல்வரூபன் (வைத்தீஸ்வரா கல்லூரி), வேலுப்பிள்ளை சுதர்மினி (சென்.திரோசா பெண்கள் கல்லூரி), இராமரெத்தினம் தர்மேந்திரா (உரும்பிராய் இந்துக் கல்லூரி), சரவணமுத்து தமிழ்செல்வி (சென்.திரேசா பெண்கள் கல்லூரி), சின்னத்துரை வாசுகி (சென்.திரேசா பெண்கள் பாடசாலை), நாகராஜா அஜிந்தன் (அச்சுவேலி மத்திய கல்லூரி), செல்வராசா யசோதா (அத்தியார் இந்துக் கல்லூரி), தம்பாப்பிள்ளை அம்பாலிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), இராசேந்திரம் பார்த்தீபன்(கொக்குவில் இந்துக் கல்லூரி), வேலாயுதம் பிரகாஷ் (அத தியார் இந்துக் கல்லூரி), பத்மகுமார் விஜயதீபன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெயராஜா ஜெனித்தா (கொக்குவில் இந்துக் கல்லூரி), அமிர்தவர்சினி அரசரட்ணம் (கொக்குவில் இந்துக் கல்லூரி), காயத்ரி செல்லத்துரை (கொக்குவில் இந்துக் கல்லூரி), சிதம்பரநாதன் சஜீவன் (அத்தியார் இந்துக் கல்லூரி), ரவீந்திரகுமாரன் நிஷாந்தன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), ராதிகா முருகையா (இந்து மகளிர் கல்லூரி), நல்லையா வசீராதயன் கஜானந் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), தங்கராசா அனோஜா (இந்து மகளிர் கல்லூரி), விமலதர்மஜயா ஞானரூபன (சென். ஜோன்ஸ் கல்லூரி), யோகேஸவரன் மயூரன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), சிறிஸ்கந்தராசா துஷ்யந்தன் (சென்.ஜோன்ஸ கல்லூரி), ஜெயப்பிரபா ஜெகதீஸ்வரன்( இந்து மகளிர் கல்லூரி), முருகையா துஷ்யந்தன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), பிரேமச்சந்திரன் யதுஷ்யன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), யோகராசா கிஷானந் சென் ஜோன்ஸ் கல்லூரி), சிவநந்தினி தம்பையா (ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி), யோகமலர் டீயோப்றா (சென்.ஜேம்ஸ் கல்லூரி), அரியதாஸ் சகாயராஜா (சென்.சாள்ஸ் மகா வித்தியாலம்), இரத்தினசிங்கம் சிந்துஜா (ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி), குணசீலன் தர்ஷன் (ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி), ஜோசேப் அன்ரன் சாம்சன் (சென். சாள்ஸ் மகா வித்தியாலயம்), ஜெறாட் ரெஜிமாலா (சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), சிவராஜா சிவகௌரி (சோமஸ்கந்த கல்லூரி), அன்ரன் வசந்தராஜ் (சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம்), கதிர்காமநாதன் திருவேனி (ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி), தெய்வேந்திரன் தர்சன் (சென்.சாள்ஸ் மகா வித்தியலாயம்), தயாளினி விஷ்ணுசிங்கம் (சோமஸ்கந்த கல்லூரி), கோபிகிருஷ்ணா சின்னத்துரை (சோமஸ்கந்த கல்லூரி), பாலசிங்கம் தாரணி (இடைக்காடு மகா வித்தியாலய்ம்), லிங்கரெட்ணம் நிரஞ்சலா (பெரியகுளம் மகா வித்தியாலயம்), கிருத்தியா நடராஜா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), மரிற்றா ரொசானி டேனாட் (திருக்குடும்ப கன்னியர் மடம்), மகாதேவா மகிந்தராஜ் (மத்திய கல்லூரி), இரவீந்திர சர்மா கிரிதரன் (மத்திய கல்லூரி), டர்லின் நீறுஜா சத்தியநேசன் (திருக்குடும்ப கன்னியர் மடம்), துரைசிங்கம் யதுகுலன் (மத்திய கல்லூரி), பிறேமாஜினி சிவபாலன் (திருக்குடும்ப கன்னியர் மடம்), தேவதாசன் அஜந்தன் (மத்திய கல்லூரி), வேலாயுதம் பிள்ளை றீற்றா பிரியதர்ஷினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி). (ஒ)

# கைதடி, நாவற்குழியில் இந்து கலாசார சபை

கைதடி, நாவற்குழி தெறகுப் பகுதியில் இந்து சமய கலாசார சபை நேற்று திங்கட்கிழமை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியை நேற்று நேரில் பார்வையிடச் சென்ற இந்து விவகார அமைச்சர் முன்னிலையில் இந்தச் சபை ஆரம்பிக்கப்பட்டது.

அப்பகுதி மக்கள் எதிர் நோக்கும் போக்குவரத்து உட்பட பொதுப் பிரச்சினைகள் குறித்து அமைச்சரிடம முறையிடப்பட்டது. இவை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்து பேசி ஆவன செய்வதாக அமைச்சர் உறுதியளித்ததாகக் கூறப்படுகிறது. (ஒ)

# ‘உயிரியல்’ தொடர்பாக இன்று பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்,நவ.12

கொக்குவில் இந்துக்கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் உயிரியல் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான செயன்முறைப் பயிற்சிப் பட்டறை இன்று காலை 9மணி முதல யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடத்தின் உயிரியல்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விவசாயபீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் இந்தப் பயிற்சிப்பட்டறையை நிகழ்த்துவர்.

பீடைகள், பூச்சிபீடைகள், நுண்ணங்கிகள் பயிர்ச்செய்கையில் எதிர் நோக்கப்படும் பிரச்சினைகள் இன்னும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக இந்தப் பயிற்சிப் பட்டறையில் விரிவாக ஆராயப்படும் எனத்தெரிவிக்கப்பட்டது. (எ)

# புலிகளின் காவல் நிலையங்கள்: பிரதமருடன் ஹக்கீம் தொடர்பு

கொழும்பு,நவ.12

விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்தில் பொலீஸ் நிலையங்களை (காவல் நிலையங்களை) நிறுவிவரும் நடவடிக்கை தொடர்பாகவும் அவர்களுடைய நீதி, நிர்வாக சேவை விஸ்தரிப்புகளுக்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தொடர்பாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் தலைவரும் துறைமுக அபிவிருத்தி, கப்பல் துறை, கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் சமய விவகார அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுடன தொடர்பு கொண்டுள்ளார்.

முஸ்லிம் பிரதேசங்களில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படும் விதம் குறித்து சமாதானப் பேச்சுக்களின் போது ஆராயப்படவேண்டியது அவசியமானதும் அவசரமானதுமாகும் என்றும் தாம் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியுள்ளதாகவும் அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

இது குறித்து நோர்வேத் தூதர் ஜோன் வெஸ்பேர்க்குடன் தொலைபேசியில் தொடர்புகொண்டபோது, அவருக்கு கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளதாகவும், விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் இந்த விடயம் தொடர்பாக எழுத்துமூலம் அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் ஹக்கீம் குறிப்பிட்டார். (ஒ)

# துர்நடத்தையில் ஈடுபட்டோர் இளைஞர் குழுவிடம் சிக்கினர்!

## கொடிகாமத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம்,நவ.12

கொடிகாமம் சந்தைப் பகுதியில் துர்நடத்தையில் ஈடுபட்ட 55 வயது நபரும் 40 வயதுப் பெண்ணும் கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களிடம் கையும்மெய்யுமாகப் பிடிபட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் கொடிகாமம் சந்தைக்குப் பின்புறமாகவுள்ள வர்த்தகக் களஞ்சியம் ஒன்றில் இவ்விருவரும் துர்நடத்தையில் ஈடுபட்டதைப் பொது மக்கள் சிலர் கண்டனர்.

அவர்கள் இச்சம்பவம் குறித்து உடனடியாக கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழுவிடம் தெரிவித்தனர். கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் அவ்விடத்துக்கு வந்தவேளை, சம்பந்தப்பட்ட நபர் ஓடித்தலைமறைவாகினார். இளைஞர்கள் களஞ்சியக் கதவைப் பூட்டிவிட்டு பொலீஸாரிடம் தெரிவித்தனர்.

அவ்விடத்திற்கு வந்த பொலீஸார் பெண்ணைக் கைதுசெய்து விசாரணையின் பின்னர் விடுவித்தனர்.

# சமயதீட்சை வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.12

யாழ்.சைவ பரிபாலன சபையின் ஆதரவில் எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவ சமயதீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

சிவஸ்ரீ கை.திருஞானசம்பந்தக் குருக்கள் தலைமையில் சமயதீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.(எ)

# பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,நவ.12

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலாநிதிப் பட்டம் பெற்றமையைப் பாராட்டி நடத்தப்படும் பாராட்டுவிழா இன்று காலை 9.30மணிக்கு கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(எ-12)

# யாழ். அரியாலை மினிபஸ் சேவை

கொழும்புத்துறை,நவ.12

யாழ். நகரில் இருந்து அரியாலை தபாற்கட்டை சந்தி வரை தனியார் மினிபஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமும் இரண்டு மினிபஸ்கள் இச் சேவையில் ஈடுபடுவதாகவும் கண்டி வீதியில் தூர இடங்களுக்கு செல்லும் பஸ்களில் இட நெருக்கடி காணப்படுவதால் குறுகியதூர பயணிகள் நீண்டநேரம் காத்துநிற்க வேண்டியுள்ளதாகவும் -

அவர்களின் வசதி கருதியே இச் சேவை ஆரம்பிக்கப்பட்டதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

(ஒ-30)

# மொழிவிருத்தி கலந்துரையாடல்

தென்மராட்சி,நவ.12

தென்மராட்சி கல்வி வலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்ட தரம் ஆறுக்கான மொழிவிருத்தி செயல் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 18ஆம் திகதி காலை 9.00 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ஒ-117)

# முதலாவது ஆஷஸ் கிரிக்கெட் போட்டியில ஆஸி.அணிக்கு 385 ஓட்டங்களால் வெற்றி

இங்கிலாந்து அணியுடனான ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டியில் ஆஸ்திரேலிய அணி 385 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 79 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

ஆஸி. அணி முதல் இன்னிங்ஸில் 492 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 325 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

மார்க்ஸ் ட்ரெஸ்கொதிக் 72 ஓட்டங்களையும் ஜே.கிரௌலி ஆட்டமிழக்காமல் 69 ஓட்டங்களையும் பெற்றனர். நஸார்ஹுஸைன் 51 ஓட்டங்களையும் பெற்றார்.


கிளென் மெக்ராத் 87 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஜிலெஸ்பி, பிச்சல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

ஆஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 71 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 296 ஓட்டங்களைப் பெற்றநிலையில், துடுப்பாட்டத்தை நிறுத்திக்கொண்டது. மத்தியூஹைடன் 103 ஓட்டங்களைக் குவித்தார்.

இப்போட்டியின் முதல் இன்னிங்ஸிலும் அவர் 197 ஓட்டங்களைக் குவித்தமை குறிப்பிடத்தக்கது. ஆஷஸ் கிரிக்கெட் போட்டியொன்றின் இரு இன்னிங்ஸிலும் சதம் குவித்த நான்காவது வீரர் ஹைடன் ஆவார்.

பார்ட்ஸ்லி(ஓவல் - 1909), ஏ.மொரிஸ் அடிலெய்ட் 1947), ஸ்ரீவ்வோ(ஒல்ட் ட்ரபோர்ட் 1997) ஆகியோர் இதற்கு முன் இரு இன்னிங்ஸ்களிலும் இச் சாதனையைப் புரிந்திருந்தனர்.

போட்டியின் நான்காவது நாளான நேற்றுமுன்தினம் இங்கிலாந்து அணி வெற்றிபெறுவதற்கு 464 ஓட்டங்கள் தேவையான நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது.



ஆனால், 79 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது அவ்வணி. பிரிஸ்பேன் 'கெப்பா' மைதானத்தில் இங்கிலாந்து அணி பெற்ற ஆகக்குறைந்த ஓட்ட எண்ணிக்கை இது.

1990 - 91இல் பெற்ற 114 ஓட்டங்களே இதற்கு முன் இம்மைதானத்தில் இங்கிலாந்து அணி பெற்ற ஆகக்குறைந்த ஓட்ட எண்ணிக்கையாக இருந்தது.

இங்கிலாந்து அணியின் இரண்டாவது இன்னிங்ஸில் ஆகக்கூடுதலாக மார்க் புட்சர் 40 ஓட்டங்களைப் பெற்றார். மூன்று வீரர்களே இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற்றனர். சிமோன் ஜோன்ஸ் காயம் காரணமாக துடுப்பெடுத்தாடவில்லை.

ஆஸ்திரேலிய பந்துவீச்சாளர்களில் கிளென் மெக்ராத் 36 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் ஷேன்வோர்ன் 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். கிலெஸ்பி ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். முதலாவது போட்டியின் சிறப் பாட்டக்காரராக மத்தியூ ஹைடன் தெரிவானார். இரண்டாவது போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி அடிலெய்ட் நகரில் ஆரம்பமாகிறது. (ஓ)

# விளையாட்டு அபிவிருத்திக்கு ஸ்கந்தாவில் குழு அமைப்பு

வலி.வடக்கு,நவ.12

பாடசாலை மட்டத்தில் பல்வேறு விளையாட்டுக்களையும் முன்னெடுத்துச் செல்வதற்காக விளையாட்டு அபிவிருத்திக் குழு... ...ந்த ரோடை ஸ்கந்தவரோதயக் ...

**விளையாட்டு**

...ரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்களை உள்ளடங்கியதாக இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. பாடசாலையில் ஏனைய துறைகளின் அபிவிருத்திக்கு வேண்டிய முன்னேற்ற நடவடிக்கைகள் உரிய சங்கங்கள் மூலம் மேற்கொள்வதைப் போன்று விளையாட்டுத் துறையையும் நன்கு திட்டமிடப்பட்ட முறையில் முன்னெ...ச் செல்வதற்கு இந்த அபிவிருத்...க் குழு நடவடிக்கைகளை மேற்கொ...ளும்.

(ஓ-86)

# 16ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா: 200 மீற்றர் ஓட்டத்தில் யாழ்.வீராங்கனை முதலிடம்

16ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மிதிலா கனகசிங்கம் முதலிடம் பெற்றார்.

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை இவ் விளையாட்டு விழா ஆரம்பமானது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இப்போட்டிகளை நடத்துகிறது.

விழாவின் ஆரம்ப வைபத்தில் இளைஞர் விவகார, விளையாட்டுத் துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

முதல்நாளன்று நடைபெற்ற பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் மிதிலா 27 செக்கன்களில் ஓடி முடித்தார்.

இப்போட்டியில் பதுளை வீராங்கனை அனோமா லக்மலி இரண்டாமிடத்தையும், மாத்தளை வீராங்கனை எம்.கே.தெரணியகல மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

இதேவேளை, நீளம் தாண்டுதல் போட்டியில் மிதிலா இரண்டாமிடத்தைப் பெற்றார். இவர் 5.09 மீற்றர் நீளம் பாய்ந்தார். மாத்தளையைச் சேர்ந்த என்.கே.தெரனியகல 5.27 மீற்றர் பாய்ந்து முதலிடம் பெற்றார்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.சசிஹரன் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் இரண்டாமிடம் பெற்றார். சசிஹரன் 59.25 மீற்றர் எறிந்தார். கண்டியைச் சேர்ந்த பி.கே. ரத்னாயக்க 62.06 மீற்றர் எறிந்து முதலிடம் பெற்றார்.

இவ்விழாவின் முதல் நாளன்று 3 புதிய சாதனைகள் படைக்கப்பட்டன.

ஆண்களுக்கான 800 மீற்றர் போட்டியில் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த ரஞ்சித் பெரேரா ஒரு நிமிடம், 54.4 செக்கன்களில் ஓடி புதிய சாதனை படைத்தார்.

பெண்களுக்கான 800 மீற்றர் போட்டியில் இரத்தினபுரியைச் சேர்ந்த ஓ.டி.ரி.நெலும் குலரட்ண 2 நிமிடம் 20.7 செனக்கன்களில் ஓடி புதிய சாதனை படைத்தார்.

ஆண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் பொலன்னறுவையைச் சேர்ந்த எம்.எஸ்.கே.ஜயசுந்தர 13 மீற்றர் எறிந்து சாதனை படைத்தார்.

(ஓ)

## பந்துல தலைமையில் குழு வருகிறது!

குருநகர்,நவ.12

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் விசேட கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் பந்துல வர்ணபுர தலைமையிலான ஆறு பயிற்றுநர் கொண்ட குழு இன்று செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளது.

இக்குழு 15ஆம் திகதிவரை யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியில் யாழ். மாவட்ட கிரிக்கெட் பயிற்சியாளர்களுக்கும பாடசாலை மாணவர்களுக்கும் லெவல் 1 பயிற்சிக்கான வகுப்புகளை நடத்தி சான்றிதழ்களை வழங்கவுள்ளது.

யாழ்மாவட்ட விளையாட்டு அமைப்பின் அனுசரணையுடன் யாழ்மாவட்ட கிரிக்கெட் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (ஓ-51)

# சிலரின் தான்தோன்றித்தனத்தால் உதைபந்தாட்டம் அதலபாதாளத்தில்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் விளையாட்டுப் போட்டிகள் பலவும் தென்னிலங்கையில் இருந்து வரும் பிரமுகர்களைக் கௌரவிக்கவும், மகிழ்விப்பதற்காகவும் இடம்பெறுகின்றனவே தவிர உண்மையாக விளையாட்டை வளர்க்கவேண்டும் என்ற அடிப்படையில் இடம்பெறுவதாகத் தெரியவில்லையென விளையாட்டுத்துறை ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஒரு மென்பான நிறுவனத்தின் பெயரில் கல்வி வலயங்களுடன் தொடர்புகள் அற்ற முறையில் ஓர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி யாழ்.நகரிலுள்ள பாடசாலை அணிகளுக்கு இடையே ஆரம்பமாகியது.

ஆனால், இறுதியில் இப்போட்டி முடிவுகள் பாடசாலை அணிகளுக்கு ஏமாற்றத்தைக் கொடுப்பதாக அமைந்துள்ளன. அத்துடன் யாரோ சிலரை திருப்திசெய்வதற்காக நடத்தப்பட்ட சுற்றுப்போட்டியாக இடம்பெற்று முடிந்தது.

குறிப்பாக அரையிறுதி ஆட்டத்தில் பல்வேறு குளறுபடிகள் இடம்பெற்று உதைபந்தாட்ட விதிமுறைகள் பின்பற்றப்படாமல் நடைபெற்றதாக பங்குபற்றிய பாடசாலைகள் முறையிட்டுக்கொள்கின்றன.

வலிகாமம் பகுதியைச் சேர்ந்த பாடசாலையொன்று மேற்படி சுற்றுப் போட்டியில் இடம்பெற்ற குளறுபடிகள் பலவற்றை சுட்டிக்காட்டி உரிய இடங்களுக்கு முறையீடு செய்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இப்போட்டிகளுக்கு இணைப்பாளராகக் கடமையாற்றுபவர் யாழ். மாவட்ட கல்வி வலயங்கள் எதனுடனும் தொடர்புகளோ அன்றி சம்மதமோ இன்றி தன்னிச்சையாக பாடசாலைகளுக்குச் சென்று பயிற்றுவிப்பாளர் எனக்கூறி தொழிற்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

ஆனால், சிலரின் தொழிற்பாடு முழுவதும் ஒரு பாடசாலையை மையமாகக் கொண்டே செயற்படுத்தப்படுவதாக விளையாட்டு ஆர்வலர்கள் கவலைதெரிவித்தனர்.

விளையாட்டு விதிகளை கையாள்பவதிலுங்கூட பல்வேறு முரண்பாடுகள் எழுந்துள்ளன. அதாவது யாழ்.மாட்டத்தில் உள்ள எவருக்குமே விளையாட்டு விதிகள் தெரியாது என்ற அடிப்படையில் விநோதமான விதிகள் முன்வைக்கப்பட்டும் வருகின்றன.

உதாரணமாக உதைபந்தாட்டத்

**வில்லவன்**

தில் பந்து கோல் கம்பத்தின் ஊடாகச் சென்று தனது முழுப்பகுதியையும் கடந்தால் மட்டும் போதாது கம்பத்தின் பின்னால் கட்டப்பட்டுள்ள வலையையும் தொடவேண்டும் என விநோத விதி கூறப்படுகின்றது.

இதன் அடிப்படையில் அண்மையில் யாழ்.வலய மட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற போட்டியொன்றில் பந்து கோல் கம்பத்தினுள் புகுந்தபோது கோல் என்று மத்தியஸ்தரிடம் ஆட்சேபிக்கப்பட்டது.

மத்தியஸ்தர் பந்து கோல் கம்பத்தைத் தாண்டவில்லையென்று கூறி பிரச்சினையை வளர்க்க விரும்பாது, 'உங்களின் பயிற்றுநர் உங்களுக்கு என்ன கூறியுள்ளார்? வலையில் பட்டால் தானே கோல். ஆகவே, வலையில் படவில்லை. கோல் இல்லைத் தானே' என்று கேட்டார். நாளை உதைபந்தாட்டத்தில் பெரும் சாதனை படைக்க விரும்பும் அந்த அணியினரும், பயிற்றுநரின் தவறான அறிவுறுத்தலால் அதனை ஏற்கவேண்டியதாகி விட்டது.

இது ஒருபுறமிருக்க மென்பான நிறுவனத்தின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட போட்டி இடைநடுவில் ஒரு சேவை நிறுவனத்தின் பெயரில் மாற்றப்பட்டு பரிசளிப்பு விழாவும் முடிவடைந்துள்ளது.

வேடிக்கை என்னவென்றால் குறிப்பிட்ட கழகத்தின் ஆளுநர் வருகையையொட்டி சில இறுதிப்போட்டிகள் முடிவடையாமலே பரிசளிப்பு விழா பூர்த்தி அடைந்துள்ளது.

14 வயதுப் பிரிவுகள் போட்டி முடிவடைந்த நிலையிலும் 16 வயதுப் போட்டிகள் கால் இறுதி ஆட்டம்கூட பூர்த்தி அடையாமல் இருக்கக்கூடியதாகவும் 18 வயதுப் பிரிவு ஆட்டம் காலை, மாலையென வைத்து இறுதிப்போட்டி முடிந்தும், 3ஆம் இடத்திற்கான ஆட்டம் முடிவடையாமலும் பரிசளிப்புவிழா பூர்த்தி அடைந்துள்ளது.

தென்பகுதியில் இருந்து வருகை தந்துள்ள ஆளுநரை கௌரவிப்பதற்காக பெண்கள் பாடசாலை அணிகளுக்கு இடையே உதைபந்தாட்டப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டன. ஆனால், இறுதிநேரத்தில் அமைப்பாளர்கள் சரியான தகவல் வழங்காமையால் அப்பாடசாலைகள் கலந்து கொள்ளவில்லையென அமைப்பாளர்களினால் தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும், ஒரு தேசிய பாடசாலையின் பெண்கள் அணியுடன், அயல் பாடசாலையொன்றின் ஆண் அணி விளையாட விடப்பட்டது. இதற்கு இரு பாடசாலைகளின் ஆர்வலர்களின் பூரண ஆதரவும் கிடைக்கப்பெற்றது.

ஆனாலுங்கூட தற்போது எழுந்துள்ள பிரச்சனை கலாசாரப் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. பெண்கள் பாடசாலை அணி எவ்வாறு ஆண்கள் பாடசாலை அணியொன்றுடன் விளையாடமுடியும் என்பதே அப்பிரச்சனையாகும். பெண்கள் பாடசாலை அணி வீராங்கனைகளுக்கு இறுதி நேரம் மட்டும் தாங்கள் ஆண்கள் பாடசாலை அணியுடனேயே மோதவுள்ள விடயம் தெரியப்படுத்தப்படாது மறைக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்களும்கூட இறுதிநேரம் வரை பெண்கள் பாடசாலை அணிகளிடையேதான் போட்டி இடம்பெறவுள்ளதாக எதிர்பார்த்து இருந்தனர். ஆனால், இறுதி நேரத்தில் ஆண்கள் அணியுடன் விளையாடியபோதிலும் அதிபருக்கு அஞ்சி வாய் மூடிக்கொண்டனர் என்பதை தற்போது உணரமுடிகிறது. ஓரிரு நாள்களில் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்க உறுப்பினர்கள் சிலர் யாழ்ப்பாணம் விஜயம



செய்யவுள்ள நிலைமையில் பெண்கள அணி விடயம் மற்றும் பாடசாலைகளில இடம்பெறும் போட்டிகள் விடயமாகவும பல்வேறு சர்ச்சைகளும் தோன்றுவதற்கு வாய்ப்பேற்பட்டுள்ளது.

இதற்கிடையில், இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்க தென்பகுதி உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் வருவதையிட்டு பல்வேறு பிரச்சினைகள் யாழ்.மாவட்டப் பாடசாலை அதிபர்கள், உடற்கல்வி ஆசிரியர்களுக்கிடையே எழுந்துள்ளன.

தென்பகுதியில் இருந்து வருகை தருகின்ற பாடசாலை அணிகளின் தலைவர், செயலாளர் முன்னிலையில் யாழ்.மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தை மீளமைப்புச் செய்வதற்கான கூட்டம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தைப் புனரமைப்பு செய்வதற்கான கூட்டம் நடைமுறைப்படி கல்வி வலயத்தினால் மேற்கொள்ளப்படவேண்டும்.

கல்வி வலயங்களுக்கு இது சம்பந்தமான அறிவுறுத்தல்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லையென தெரியவருகின்றது. இத்தகைய நிலையில் கல்வி வலயங்கள் பாடசாலைகளின் அதிபர்கள், உடற்கல்வி ஆசிரியர்களுக்கு அறிவிக்காது இக்கூட்டத்தில் அவர்கள் பாடசாலை நேரத்தில் கலந்துகொள்ளமுடியுமா என்பதே தற்போது எழுந்துள்ள பிரச்சினையாகும்.

பார்க்கும்போது இதுவும்கூட நடைமுறைக்குப் புறம்பாக ஒரு சிலர் தமது செல்வாக்கைத் தென்பகுதியிலிருந்து வருபவர்களிடம் வளர்த்துக்கொள்வதற்காக மேற்கொள்ளும் செயற்பாடாகவே அமைந்துள்ளது.

யுத்தத்தால் சீரழிந்து போயுள்ள குடாநாட்டில் விளையாட்டுத்துறையை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் வேளையில், ஒரு சிலரின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளால் குடாநாட்டு விளையாட்டுத் துறை குறிப்பாக உதைபந்தாட்டம் அதலபாதாளத்துக்குச் சென்று கொண்டிருக்கிறது. இதனைக் கவனிக்க வேண்டியவர்கள் உரியமுறையில் கவனிப்பார்களா?

★




சிறுவர்களுக்கான 'ஆக்கப்பணிக்கோர் அழைப்பு' என்னும் நிகழ்வு அண்மையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.
மேற்படி நிகழ்வை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவன் ஒருவனுக்கு யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ-76)

# பிள்ளைகளின் கல்வி குறித்து பெற்றோர் தூரநோக்குடன் சிந்திக்க வேண்டும்!

## பங்குத்தந்தை அறிவுறுத்தல்

குருநகர்,நவ.12

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் தூரநோக்குடன் சிந்தித்து அவர்களைக் கல்வியில் முன்னேற்ற உழைக்கவேண்டும்.

குருநகர் அறிவகம் அமைப்பினால் குருநகர் தொடர்மாடி சனசமூக நிலையத்தில் தொடக்கி வைக்கப்பட்ட இரவுப் பாடசாலையின் ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை வணபிதா அ.பி.ஜெயசேகரம் அடிகளார் மேற்கூறியவாறு தெரிவித்தார்.

அறிவகம் அமைப்பின் இயக்குநர் சே.சுவைணஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெற்றோர் பலர் தமது பிள்ளைகளை வீண் களியாட்ட நிகழ்வுகளில் கலந்துகொள்ளச் செய்வதும் நாளாந்தம் தொலைக்காட்சிப் பெட்டிகள் முன்பாக இருத்துவதுமே தமது கடமை - தமது பிள்ளைகளுக்குச் செய்யும் நன்மை - என நினைக்கிறார்கள். பிள்ளைகளுடைய கல்வியில் அக்கறை உள்ள பெற்றோர்கள் இத்தகைய வீணான பொழுது போக்கு அம்சங்களைத் தவிர்த்து அவர்களுடைய கல்வி வளர்ச்சிக்கு ஊக்குவிக்கவேண்டும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை செலுத்துவதுடன் தெருக்களில் நின்று வீணான பொழுதைப் போக்கி தமது எதிர்காலத்தைப் பாழாக்கும் செயற்பாடுகளில் ஈடுபடும் இளைஞர்கள் தமது போக்கை மாற்றி சமூக அபிவிருத்திக்கு உதவ முன்வர வேண்டும் - என்றார். (ஒ-51)


## மனமுவந்த வாழ்த்துக்கள்

எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரும் இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றவருமான

உயர்திரு.
க.பாலசுப்பிரமணியம்



அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் இன்னும் பல பதவியுயர்வுகள் பெறவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்,
லாலாசோப் - அச்சுவேலி.
(C/24832)



## கண்ணீர் அஞ்சலி

மறவன்புலோ தனங்களப்பு மண்டற்காட்டுக் கந்தசுவாமி கோயில் பரிபாலன சபைத் தலைவரும் விஷகடி வைத்தியருமான

### செல்லையா திருநாவுக்கரசு

அவர்கள் 11.11.2002 இல் சாவகச்சேரியில் காலமானதையிட்டு நாம் மிகவும் வேதனை அடைகின்றோம். அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி துயருறும் அவரது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் ஆகியோருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
(10526)
மறவன்புலோ மக்கள்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் செல்லப்பா நாகலிங்கம்

திதி: 12.11.2002

அன்புக்கோர் அணிகலனாய் பண்புக்கோர் இலக்கணமாய்
அவனியிலே வாழ்ந்த எங்களது அன்பு தெய்வமே!
முப்பத்தொரு நாளும் ஆயிற்றோ முழு நிலவு மறைந்து!
எப்போதும் உங்கள் முகம் எம்முன்னே தோன்றுதப்பா!
ஆத்மா சாந்தி அடைவதாக!
ஓம் சாந்தி

நினைவு கூருவோர்
பிள்ளைகள்

றெயில் றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(10529)
தகவல்: நா.வாசுகி


# வாகனங்களைக் கொள்ளையிடும் நால்வர் குழு தெஹிவளையில் கைது

கொழும்பு,நவ.12

ஆடம்பர வாகனங்களைக் கொள்ளையடித்து விற்பனை செய்யும் நான்கு பேர் அடங்கிய குழு ஒன்றை தெஹிவளைப் பொலீஸார் கைது செய்திருக்கின்றனர். அவர்களால் கொள்ளையடிக்கப்பட்ட 20 வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

கொழும்பிலும் அதனைச் சுற்றிவரவுள்ள பகுதிகளிலும் ஆடம்பர வாகனங்களைக் கொள்ளையடிப்பதில் இக்குழுவினர் ஈடுபட்டு வந்திருக்கின்றனர் எனவும் வாகனங்களின் பத்திரங்களில் மோசடிகளைச் செய்து வாகனங்களை விற்பனை செய்திருக்கின்றனர் எனவும் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது.

இக்கொள்ளைகள் குறித்து தெஹிவளைப் பொலீஸார் தொடர்ந்து விசாரணைகளை நடத்திவருகின்றனர்.(ஒ)

# அடுத்த ஆண்டு முதல் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை சேவை

அச்சுவேலி,நவ.12

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் அடுத்த வருடத்தில் இருந்து "வழிகாட்டல் ஆலோசனைச் சேவை" முழுமையாக நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. வழிகாட்டல் ஆலோசனைச் சேவைக்கு ஆசிரியர்களால் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படவுள்ளனர்.

வழிகாட்டல் ஆலோசனைச் சேவைக்கு பொருத்தமான ஆசிரியர்களைத் தெரிவுசெய்தல், பயிற்சி அளித்தல் தொடர்பான வேலைத் திட்டங்கள் வலயக்கல்வி அலுவலகங்களிலும், ஆசிரியர் நிலையங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவைக்கு நியமிக்கப்படவுள்ள ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

600 மாணவர்களுக்கு மேல் கல்வி கற்கும் பாடசாலைகளில் ஓர் ஆசிரியரும், 600-300 இடைப்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் பகுதி நேரமாகவும் வகுப்பறைக் கற்பித்தல் கடமையில் இருந்து ஆசிரியர்கள் விடுவிக்கப்படவுள்ளனர். (ஒ-11)

## அரியாலை சந்தை புனரமைப்பு

கொழும்புத்துறை,நவ.12

2000ஆம்ஆண்டு நடைபெற்ற யுத்தங்களில் முற்றாக சேதமடைந்த அரியாலை துாற்கட்டை சந்தை புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அடுத்த ஆண்டு ஜனவரியில் இச் சந்தை வழமைபோல் இயங்க ஆரம்பித்துவிடும் என மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-30)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு 80 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,நவ.12

யாழ்போதனா வைத்தியசாலையின் 28,29,30ஆம் இலக்க வார்ட்டுக்களை புனரமைக்கவென சுகாதார அமைச்சு 80லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக யாழ்.வைத்தியசாலையின் பணிப்பாளர் எஸ்சதர்முகன் தெரிவித்தார்.

இந்தப் புனரமைப்பு வேலைகள் ஆண்டு முடிவுக்குள் பூர்த்தி செய்யப் படவுள்ளன.

மிக அதிக எண்ணிக்கையான நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெறும் இந்த வார்ட்டுக்கள் இதுவரை காலமும் புனரமைக்கப்படாமல் இருந்தமையால் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியமை குறிப்பிடத்தக்கது.

## கிளைக்கடை கையளிப்பு

தென்மராட்சி,நவ.12

பளைப் புதுக்காட்டு சந்தியில் கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் நடத்தப்பட்டு வந்த கிளைக்கடையும் சிற்றுண்டிச் சாலையும் எதிர்வரும் 15 ஆம் திகதி பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரிடம் கையளிக்கப்படவுள்ளது.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் இயக்கச்சி, மாசார், சோரன்பற்று, புதுக்காடு, தர்மக்கேணி ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்த வேளையில் கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் இக்கிளைக்கடை திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## குடி தண்ணீர் விநியோகம்

தென்மராட்சி,நவ.12

துன்னாலை, தில்லையம்பலப் பிள்ளையார் கோயிலடியில் தங்கியுள்ள குடும்பங்களுக்கென சாயி நிறுவனத்தினரால் குழாய்க்கிணறும் தொட்டியும் அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

இக்குழாய்க்கிணறு மூலம் குடியிருப்புகளுக்கு குடிதண்ணீர் விநியோகத்தை கடந்த சனிக்கிழமை கரவெட்டி பதில் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் ஆரம்பித்துவைத்தார். (ஒ-117)

## தேசியமட்ட பரிசளிப்பு விழா யாழ்ப்பாணத்தில்

அச்சுவேலி,நவ.12

சமூகக்கல்வி பொது அறிவுப் போட்டியில் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. தேசிய மட்டத்திலான பரிசளிப்பு விழாவை நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் இந்த வருடத்திற்கான சமூகக் கல்வி பொது அறிவுப் போட்டிகள் பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் என்ற நிலைகளில் நடைபெற்றன.

தேசிய மட்டத்திலான போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய மட்டத்திலான பரிசளிப்பு விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் வழிகாட்டலில் நடைபெற்றுவருகின்றது. (ஒ-11)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு 04 - 01 - 1922



உதிர்வு 08 - 10 - 2002

### அமரர் சின்னையா மார்க்கண்டு

அன்புக்கோர் அணிகலமாய் பண்புக்கோர் இலக்கணமாய் வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

இணுவில் மேற்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் அமரர் சின்னையா மார்க்கண்டு அவர்களின் இறுதிக்கிரியைகளில் நேரடியாகக் கலந்து கொண்டோருக்கும் தந்தி மூலமும், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியோருக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றியவர்களுக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இன்று (12.11.2002) செவ்வாய்க்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காப் பிரார்த்திப்பதோடு நண்பகல் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"கௌரி வாசம்",
இணுவில் மேற்கு, இணுவில். (10521)

அன்னாரின் மறைவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



## மரண அறிவித்தல்கள்

### கந்தையா நாகம்மா

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகம்மா நேற்று (11.11.2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோர்ச் கந்தையாவின் அன்பு மனைவியும் யேசுதாசன் - பவா (ஆஸ்திரேலியா), அலீஸ்சாந்தி (ஆஸ்திரேலியா), அன்ரன் றெஜினோல்ட் (ஆஸ்திரேலியா), அலன் ஜெபநேசன் (லண்டன்), கென்றி, ஜோன்சன் (ஆஸ்திரேலியா), சாள்ஸ் றொபின்சன் (லண்டன்) ஆகியோரின் அருமைத்தாயாரும் வேலாயுதம், காலஞ்சென்ற ஆறுமுகம், சண்முகம், யோகம்மா, வைத்திலிங்கம் (மணியம்), மகேஸ்வரி, முத்துலிங்கம், அம்பலவாணர் (I.C.R.C), சரஸ்வதி (ஹற்றன்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

105, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (10530)

தகவல்:
இ.யோகம்மாவும்
சகோதரர்களும்.

### சிவக்கொழுந்து இராசேந்திரம்

பழைய பூங்காவீதி, கொய்யாத்தோட்டத்தினை வசிப்பிடமாகக் கொண்ட சிவக்கொழுந்து இராசேந்திரம் அவர்கள் நேற்று (11.11.2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் பாக்கியத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற அன்னராணி மற்றும் சிவராணி, இந்துராணி (சிறைச்சாலை உத்தியோகத்தர் திருகோணமலை), பாக்கியராணி, செல்வராணி, சிவராஜா (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஜெயரட்ணம் (லண்டன்), குலசேகரம் (ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்), நகுலேந்திரன் (ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்), கனகராஜா (கனகா பத்திரிகையகம், திருநெல்வேலி), இராமநாதன், நீவிகா (கனடா) ஆகியோரின் மாமனாரும், கலைச்செல்வி (லண்டன்), கலைவாணி (கனடா), ஸ்ரீஆறுமுகராஜன் (லண்டன்), கிருஷ்ணதிவ்யா, தர்மேந்திரன், மோகன், நிஷாந்தி, காயத்திரி, ஜனுசன் ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2002) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

74, பழையபூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (10532)

தகவல்:-
ஆ.குலசேகரம் (மைத்துனர்)
ச.கனகராசா (மருமகன்)



ஓமந்தையில் நேற்றுமுன்தினம் அரசு மற்றும் புலிகளின் பிரதிநிதிகள் நேரில் சந்தித்து... கலந்துபேசி... முடிவுகளை மேற்கொண்டனர். அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

### 200 வருட பாரம்பரியம் கொண்ட

# மலையகத் தமிழரின் பிரதிநிதிக்கு ஒஸ்லோ பேச்சில் இடம்வேண்டும்!

### புதிய ஜனநாயகக் கட்சிக் கூட்டத்தில் கோரிக்கை

"இரு நூறு வருட பாரம்பரியத்தைக் கொண்ட மலையகத் தமிழர்களின் பிரச்சினைகளை எடுத்துச் சொல்ல, ஒஸ்லோவில் நடைபெறவிருக்கும் சமாதானப் பேச்சில் மலையக மக்கள் பிரதிநிதியும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவேண்டும்.

புதிய ஜனநாயகக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும், ஆசிரியருமாகிய எஸ்.பன்னீர்ச்செல்வம் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

கடந்த சனிக்கிழமை யாழ். "சிற்றி ஹோலில்" நடந்த புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பொழுதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மலைநாட்டுத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படும் கொடுமைகளை, கொடூரமான அடக்குமுறைகளை யாழ்ப்பாணத் தமிழருக்கும் எடுத்துச் சொல்லவே நான் இங்கு வந்துள்ளேன்.

இரு நூறு வருட வரலாற்றையும் பாரம்பரியத்தையும் கொண்டவர்கள் நாடற்றவர்களாக மட்டுமன்றி அடிப்படை வசதியற்றவர்களாகவும் ஆக்கப்பட்டு இருக்கிறோம். எமக்கெதிரான ஒடுக்குமுறைகள் காலத்துக்குக் காலம் தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன.

1983இல் யாழ்ப்பாணத்தில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டபொழுது எதிரடி எமக்கு விழுந்தது. மலைநாட்டுத் தமிழர் கொல்லப்பட்டனர். இரத்தினபுரி தொடக்கம் மஸ்கெலியவரை அவர்கள் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர்.

இதன் அர்த்தமென்ன? யாழ்ப்பாணமும் மலையகமும் ஒன்று என்பதே பேரினவாதிகளதும் ஆளும் வர்க்கத்தினதும் கண்ணோட்டம். இங்கு ஒன்று நடந்தால் அதன் பிரதிபலிப்பு அங்கு நடக்கும். என்ன காரணம் என்று அறிய அங்குள்ளவர்களுக்கு காலமெடுக்கும்.

மலையகத் தமிழர் பற்றி யாழ்ப்பாணத்தவரின் கண்ணோட்டம் என்ன? முஸ்லிம்களுக்கு ஓர் அலகு தேவைப்படுவதுபோல் மலையகத்திற்கும் ஒரு தனி அலகு வேண்டும்.

பிரிட்டனில் இருந்து ஆஸ்திரேலியாவில் குடியேறிய சிறைக்கைதிகள் அந்த நாட்டுக்குச் சொந்தக்காரராகிவிட்டார்கள். அமெரிக்காவில் குடியேறியவர்கள் அந்த நாட்டுப் பிரஜைகள், தென்னாபிரிக்காவுக்குச் சென்றவர்கள் அந்த நாட்டு உரிமைக்காரர்கள்.

ஆனால், 1823இல் இலங்கையின் கண்டிப் பிரதேசக் காடுகளை அழித்து கோப்பி பயிரிட வந்தவர்கள் - நாட்டுக்காக உழைக்க வந்தவர்கள் - இன்றுவரை நாடற்றவர்கள்; 2ஆம் தரப் பிரஜைகள்; கூலிகள்.

ஒரு கிலோ தேயிலை, உலகச் சந்தையில் ஆயிரம் ரூபாவரை விலை போகிறது. அதை உற்பத்தி செய்த மலையக மக்கள் மட்டும் பத்தடிக் காம்பராவில், பத்துப் பன்னிரண்டு பேர் பட்டினி கிடக்கிறார்கள். இந்த வாழ்வு தேவையா? யாழ்ப்பாணத்தில் ஓடிய இரத்தம் அங்கும் ஓடினால்தான் விடிவு கிடைக்குமா?

அத்துடன் அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகள் நெருக்குவாரங்கள் வேறு. 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். சொந்த நலனுககாக எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் அந்தப் பக்கம் சாய்ந்துவிடுகிறார்கள் இவர்கள்.

மலையகத் தமிழரது நிலங்கள் பறிக்கப்படுகின்றன. மேல்கொத்மலைத் திட்டத்தால், ஆறுகள், நீர் வீழ்ச்சிகள், கோயில்கள் உட்பட அனைத்து நிலங்களும் பறிபோகின்றன. எமது துன்பத்தை எடுத்துப் பேச இவர்கள் சக்தியற்றவர்கள். இத்திட்டத்திற்கு எதிராக அல்ல, ஆதரவாகக் கையுயர்த்துகிறார்கள்.

பிந்துனுவெல படுகொலைகளின் பொழுது, மலையக மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்; கண்டித்தனர். அந்த மக்களுக்குப் படிக்கப் பள்ளி இல்லை; படுக்க இடம் இல்லை; கழிவு வாய்க்கால் இல்லை. என்றுமே நாங்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே இருக்கிறோம். எமது பிரச்சினைகள் பற்றிப் பேச, சமாதானப் பேச்சுக்களில் இடமளிக்கவேண்டும்; மலையகப் பிரதிநிதி ஒருவர் கலந்துகொள்ள வேண்டும் - என்றார் அவர். (ஒ-88)

## சைக்கிள் திருட்டு!

யாழ்ப்பாணம்,நவ.12

புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்தியில் அமைந்துள்ள வீட்டின் வளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள் திருடப்பட்டது.

யாழ்.நகரில் உள்ள தனியார் கல்வி நிலையத்திற்கு கல்வி கற்பதற்காக பஸ்ஸில் செல்லும் மாணவரொருவர் நிறுத்திவிட்டுச்சென்ற சைக்கிளே திருடப்பட்டது.

கடந்த சில மாதங்களின் முன்னரும் இதே வீட்டில் நிறுத்தப்பட்ட சைக்கிள் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-96)

## புன்னாலைக்கட்டுவனில் களவாக மரம் தறிப்பு

யாழ்ப்பாணம்,நவ.12

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, குப்பிளான் ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமராத பகுதிகளில் வளர்ந்துள்ள மரங்கள் கட்டுப்பாடின்றி தறிக்கப்படுகின்றன.

புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்திக்கு அப்பாலுள்ள பிரதேசத்தினுள் நுழைபவர்கள் அங்குள்ள மரங்களை விறகுக்காகக் களவாகத் தறித்து எடுத்துச் செல்கின்றனர். அதுமட்டுமன்றி பயன்தரவல்ல பலா மரம், மாமரம் ஆகியவற்றின் குழைகளையும் கால்நடைகளின் தீவனத்தின் பொருட்டு வெட்டி எடுத்துச் செல்கின்றனர். இவ்வாறு குழைகள் பாரியளவில் வெட்டப்பட்ட காரணத்தினால் பட்டுப்போகும் நிலையில் பல பலாமரங்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-69)

### பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கக் கோரி

# கல்விசார் ஊழியர்சங்க ஆசிரியர்கள் இன்று அமைச்சு எதிரே ஆர்ப்பாட்டம்

வாழைச்சேனை,நவ.12

வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் சகல பிரதேசங்களிலும் கடமையாற்றும் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்குமாறுகோரி இன்று 12 ஆம் திகதி கல்வியமைச் சின் 'இசுறுபாய' அலுவலகத்திற்கு முன்பாக மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கல்விசார் ஊழியர் சங்கம் அந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துமென சங்கத் தலைவர் வண.முறுதெட்டுவ ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அதிபர், ஆசிரியர்களின் தொழிற் பிணக்குகளைத் தீர்த்துவைக்குமாறு கோரி கல்விசார் ஊழியர் சங்கம் முன்னைய அரசாங்கத்திடமும் இன்றைய அரசாங்கத்திடமும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பேசசு நடத்தியது. எனினும், எமக்கு வழங்கப்பட்ட அநேக வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. எனவே, இன்று கல்வியமைச்சின் முன்பாக மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தப்போகிறோம் என்று ஆனந்ததேரர் கூறினார். (ஐ-9)

# ஒலிப்பேழைகள் மூலம் இலக்கியங்களை ஆவணப்படுத்த வேண்டியது அவசியமாகும்!

### ஆலய நிகழ்வில் பேராசிரியர் வலியுறுத்து

செம்பியன்பற்று,நவ.12

ஒலிப்பேழைகளை உருவாக்கி எமது இலக்கியங்களை - பண்பாட்டுக் கோலங்களை - ஆவணப்படுத்த வேண்டிய தேவை இன்று மிக முக்கியமாகவுள்ளது.

பருத்தித்துறை கோட்டுவாசல் ஸ்ரீ சாண்டிகா பரமேஸ்வரி ஆலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் ஏ.சண்முகதாஸ் இவ்வாறு குறிப்பிட்டார்.

தனது உரையில் பேராசிரியர் சண்முகதாஸ் கூறியதாவது:-

ஒலிப்பேழைகளை உருவாக்கி எமது இலக்கியங்களை - பண்பாட்டு கோலங்களை - ஆவணப்படுத்தவேண்டிய தேவை இன்று மிக முக்கியமாகவுள்ளது. எமது கண்ணுக்கு முன்னாலேயே எமது பொக்கிஷமான யாழ்.நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. விலை மதிக்கமுடியாத ஆவணங்கள் சாம்பராகின. இந்நிலையில் எமது பொக்கிஷங்களை ஆவணப்படுத்த வேண்டிய நிலை முக்கியம் என்பது புலனாகின்றது.

நாங்கள் ஒருகாலத்தில் எழுத்திலே இருந்தவற்றைத்தான் புத்தகங்கள் மூலம் படித்துவந்தோம். காலகதியில் நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி பல முன்னேற்றங்களை ஏற்படுத்திவருகின்றது. எதிர்காலத்தில் நூலகங்கள், நூல்கள் இருக்குமா? என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

இந்நிலை மேலும் நவீனமுறையில் விருத்தியடையவுள்ளது.

கடல்கடந்து புலம்பெயர்ந்தவர்கள் செல்லும்போது இங்கிருக்கும் ஒலிப்பேழைகளைக் கொண்டு சென்று கேட்டு மகிழ்கின்றார்கள். லண்டன் கூட்டிங் முத்துமாரியம்பாள் ஆலயத்தில் நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய கப்பல் திருவிழா, வல்லிபுர ஆழ்வார் ஆலய கடல் தீர்த்த உற்சவம் போன்றவற்றைக் கொண்டாடுகின்றார்கள். பல்வேறு இடங்களிலிருந்து சென்றவர்கள் தத்தமது கிராமங்களிலுள்ள கோவில்களை நினைப்பதும் அக்கோவில்கள் பற்றிப் பாடப்பட்ட ஒலிபேழைகளைக் கேட்டு பரவசப்படுவதும் வழக்கம். இப்பரவசம் அவர்களை நீண்டகாலம் வாழவைக்கும்.

ஒரு காலத்தில் இந்தியாவில்தான் கீர்த்தனைகளைப் பாடக்கூடியவர்கள் இருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால், தற்போது காலம் மாறிவிட்டது. எங்கள் நாட்டிலே பலர் தோன்றிவிட்டார்கள் என்றார் அவர். (ஒ-36)

# திருச்சொரூப திருட்டுகளுக்கு கத்தோலிக்கசபை கண்டனம்

கொழும்புத்துறை,நவ.12

யாழ்.குடாநாட்டில் கத்தோலிக்க ஆலயங்களில் அண்மைக்காலத்தில் பழம்பெருமைமிக்க திருச்சொரூபங்கள் இனந்தெரியாதோரால் களவாடப்பட்டு வருகின்றன.

யாழ்மறை மாவட்டக் கத்தோலிக்க திருச்சபை இதற்கு தனது கண்டனத்தைத் தெரிவித்தும் சகல தரப்பினரும் இச்செயலைத் தடுக்க உதவுமாறு கோரியும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மேற்கூறிய சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. இது தொடர்பாக பொலீஸாரிடம் முறையிட்டும் பயன் ஏதும் கிட்டவில்லை.

மக்கள் போற்றுகின்ற - வணக்கத்துக்குரிய - வரலாறுச் சிறப்புடைய - இத்திருச்சொரூபங்கள் களவாடப்பட்டு வியாபார நோக்குடன் தென்பகுதிக்கு எடுத்துச்செல்லப்படுவதாக சந்தேகங்கள் வலுவடைந்துள்ளன.

எனவே, பங்குத்தந்தையாரும் மக்களும் விழிப்பாக இருந்து இவ்வாறான அசம்பாவிதங்கள் நடைபெறாது தடுக்க முயற்சிக்கவும்.

பொலீஸாரும், இராணுவத்தினரும், விடுதலைப் புலிகள் அமைப்பினரும், தமிழீழ காவல்துறையினரும் முகமாலை, ஓமந்தை போன்ற சோதனைச் சாவடிகளில் வழிப்பாக செயலாற்றி இச்செயல்களைப் புரிவோரை இனங்கண்டு புனித சொரூபங்களை மீட்டுத்தர உதவுமாறு வேண்டுகிறோம்.

பல நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த எமது யாழ்.திருச்சபையின் வரலாற்றுச் சின்னங்களான புனித சொரூபங்களை அபகரிப்போரை வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்றுள்ளது. (ஒ-30)

## பன்றித் தொல்லை அதிகரிப்பு

ஈவினை, நவக்கிரி பகுதிகளில் பன்றிகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றது. மேற்படி பகுதி விளைநிலங்களினுள் இரவு வேளைகளில் புகும் பன்றிகள் வாய்க்கால்களைக் கிளறி நாசம் செய்கின்றன. தற்போது அதிகமாக விளைவிக்கப்பட்டுள்ள கரணைக்கிழங்குப் பாத்திகளையும் பன்றிகள் கிளறி தமக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்துவதாக அப்பகுதி விவசாயிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது. இந்நிலை தொடரும் பட்சத்தில் தாம் எவ்வாறு துணிந்து உருளைக் கிழங்குப் பயிர்ச்செய்கையில் ஈடுபட முடியுமென அவர்கள் கேட்கின்றனர். (ஒ-69)

### கைதி தப்பிய விவகாரம்:

# யாழ். சிறைக்கு வருமாறு இளைஞர்களுக்கு அழைப்பு!

வலிவடக்கு,நவ.12

யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து தப்பியோடிய சிறைக் கைதி கொடுத்த தகவலின் பேரில் நான்கு இளைஞர்களை யாழ்.சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் விசாரணைக்கு சிறைச்சாலைக்கு வரும்படி அழைத்துள்ளனர்.

கடந்த மாதம் யாழ்.சிறைச்சாலையில் யாழ்.நீதிமன்றத்தின் பணிப்பின் பேரில் அரியாலை சுப்பிரமணியம் வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் ரவீந்திரன் என்பவர் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டு இருந்தார்.

அப்போது சுகவீனமுற்று இருப்பதாகக் கூறி யாழ்.போதனா வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார். அங்கிருந்து அவர் தப்பியோடினார்.

குறிப்பிட்ட நபர் பின்னர் ஓமந்தையில் வைத்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மீண்டும் யாழ்.சிறைச்சாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளார்.

சிறைச்சாலை ஊழியர்களுக்கும், தனக்கும் குளிர்பானத்துடன் மயக்க மருந்து கலந்து தந்து மயக்கமுற்ற நிலையில் இளைஞர்கள் சிலர் கடத்திசென்று ஓமந்தையில் விட்டதாக சுப்பிரமணியம் ரவீந்திரன் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்தே குறிப்பிட்ட 4 இளைஞர்களை சிறைச்சாலை ஊழியர்கள் விசாரணைக்கு அழைத்துள்ளதாக அறியமுடிகின்றது. (ஒ-86)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் குறைந்த விலையிலும், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகளும 14-11-2002 வியாழக்கிழமை மாலை விநியோகிக்கப்படும். பதிவுசெய்யவும். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10315)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 5CD பிளேயர், 3CD பிளேயர், கொட் பிளேட்+அவன் எலெக்ரிக்கல் தையல் மெசின் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R.ஜெனார்த்தனன் இல.100, K.K.S றோட், சுன்னாகம். (10513)

கலர் மீன்கள், பல இனக் குருவிகள், மீன்தொட்டிகள் அதற்குரிய அழகுப் பொருள்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55A, அரசடி றோட், தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (10511)

நல்ல நிலையிலுள்ள News Mat Yamaha -50, Honda Charly மோட்டார் சைக்கிள்கள், பெண்களுககான புதிய லுமாலா துவிச்சக்கர வண்டி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வா, 18, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P 2429, 3252. (10496)

## தவறிவிட்டது

பண்ட்றோட், கண்ணகிபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த செல்வரத்தினம் பிரபாகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.240484249V), சிறிய பேர்ஸுடன் 03-11-2002 அன்று யாழ்.நகரிற்கும் ஓட்டுமடத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கபிலா பாட்டா கடையில் ஒப்படைத்துதவவும். (10498)

## வகுப்புக்கள்

ஆண்டு 1இல் இருந்து மேற்படிப்பு வரை ஆங்கிலத்தில் கதைக்க, இலக்கணம், கடிதம் கற்றுக்கொள்ள: விக்னேஸ்வரன் ஆச்சாரி Dip/Cer in Science (City of Westminister University London) 426(302) K.K.S வீதி, யாழ்ப்பாணம். (10492)

## மணமகள் தேவை

1969 மார்கழியில் பிறந்த உத்தராட நட்சத்திர லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு 1976 ஜனவரிககுப் பின் பிறந்த 5' 5" உயரமுடைய பட்டதாரி அல்லது அதற்குச்சமமான மணமகள் தேவை. தொடர்பு: இல.12, கில்டன் பிளேஸ், பம்பலப்பிட்டி, கொழும்பு-04.

தொலைபேசி 01-594993 (10491)

## காணி தேவை

சாவகச்சேரி நுணாவில் கிழக்கிற்கும் சாவகச்சேரி சந்தைக்குமிடையில் கண்டிவீதியை முகப்பாகக் கொண்ட அண்ணளவாக நிலப்பரப்பு மூன்று (03) விஸ்தீரணமான வீட்டுடன் அல்லது வெற்றுக் காணி விலைக்குத் தேவை. தகுந்த விலை வழங்கப்படும். தொடர்பு: விளம்பர இல.1694 மே/பா உதயன். (10451)

## சஞ்சிகை வெளியீடு

தென்னிந்திய திருச்சபை யாழ். அத்தியட்சாதீனத்தின் சமூக மேம்பாட்டுக் கல்விப் பிரிவினால் வெளியிடப்படும் காலாண்டு சஞ்சிகை எதிர்வரும் 30 ஆம் திகிதி வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

ஐந்தாவது வெளியீடாக வெளிவரவுள்ள இந்தச் சஞ்சிகை "கிராமத்துக் கதைகள்" என்ற கருப்பொருளில் வெளியிடப்படவுள்ளது.(எ-17)

# கச்சாய் கடல் நீரேரியில் வள்ளத்தில் செல்லத் தடை

கச்சாய் கடல்நீரேரியில் வள்ளத்தில் சென்று மீன்பிடிக்க மீண்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கச்சாய் கடல் நீரேரியில் கடந்த 6 வருடங்களாக வள்ளத்தில் சென்று மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனை ஆட்சேபித்து அப்பகுதி மீனவர்கள் கடந்த செப்ரெம்பர் மாதம் இராணுவ முகாம் முன்னால் போராட்டம் நடத்தினர். இதன் விளைவாக கடந்த ஒரு மாதகாலமாக மீனவர்கள வள்ளத்தில் சென்று மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டனர்.

அப்போது மீனவர்கள் வள்ளங்கள் இன்றி அவதிப்பட்டனர். தற்போது பூநகரியில் இருந்து வள்ளங்கள் கச்சாய் கடல் நீரேரிக்கு மீனவர்களால கொண்டு வரப்பட்டபோதும் இராணுவத்தினர் கச்சாய் கடல் நீரேரி, கச்சாய் துறைமுகம் என்பன உயர் பாதுகாப்பு வலயம் என காரணம் கூறி வள்ளங்களில் சென்று மீன்பிடிக்க தடை விதித்துள்ளனர்.

தமக்கு சாதகமான பதில் உயர் அதிகாரிகளால் ஒரு மாத காலத்திற்குள் கிடைக்காவிட்டால் தொடர்ச்சியான மறியற்போராட்டம் நடத்தப் போவதாக மீனவர் சங்கத் தலைவர் ப.சித்திரவேலாயுதம் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான கடிதம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஓ-74)

## நாவற்குழியில் வாகன விபத்து!

கொடிகாமத்தில் இருந்து வந்த மினிபஸ்ஸும் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த ஹைஏஸ் வாகனமும் நாவற்குழிச் சந்தியில் நேற்றுக் காலை 11 மணிக்கு விபத்துக்குள்ளாகின. தெய்வாதீனமாக பிரயாணிகள் எவரும் காயங்கள் இன்றித் தப்பினர். (ஓ-74)

## பாலசம் ரகுஷணாவின் மிருதங்க வகுப்புகள்

*இடம்:* நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம்
*காலம்:* 19-11-2002 செவ்வாய் நண்பகல் 12.00 மணி

ஆர்வமுள்ளவர்களை முன்கூட்டியே பதியும் வண்ணம் வேண்டுகிறோம்.
வகுப்புகள் யாவும் இசைகலைமணி கு.கண்ணதாசன் அவர்களால் நடத்தப்படும்.

(10518) - *மேற்படி தேவஸ்தானம்*

## தசாக கிருகயக்ஞ அழைப்பு

அன்புடையீர்,

04.11.02 திங்கள் அமரத்துவமடைந்த

**தியாகராஜ சிவஐயர் கணேஸ்வரசர்மா**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் *வல்வெட்டித்துறை சிவன்கோயில், மனோகரக் குருக்கள்* அவர்களின் இலலத்தில் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

**13.11.2002 புதன்கிழமை காலை 9 மணி தசாகம்**
**16.11.2002 சனிக்கிழமை பகல் சமாராதனை**

இவ்வைபவங்களில் கலந்து பிரார்த்தனை செய்யும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ *சமாராதனையின்போது அமரரின் நினைவாக 'நியாச மஞ்சரி' என்னும் சம்ஸ்கிருத நூல்வெளியீடும் நடைபெறவுள்ளது.*

*சிவன் கோயில்,*
*வல்வெட்டித்துறை.* (10514) - குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 24 - 11 - 1921 | 12 - 10 - 2002 |

### திருமதி இரத்தினம்மா கனகசபை

அன்னாரின் வீட்டுக்கிரியை இன்று (12.11.2002) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பத்தினருடன வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* - பிள்ளைகள், மருமக்கள். (10478)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.கந்தையா இராசதுரை

*(கிராம உத்தியோகத்தர், சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கு, புத்தூர்)*

அவர்கள் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு நேற்று (11.11.2002) திங்கட்கிழமை யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் நீதிவான் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்ததையிட்டு பெருமகிழ்ச்சி யடைவதோடு, அவர் நீண்டகாலம் வாழ்ந்து மேலும் பலபதவிகளைப் பெற்று மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

*ஆவரங்கால் மேற்கு.* ந.ஆனந்தராஜா,
(10512) செ.தவராஜசிங்கம், சி.பாஸ்கரன்.

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா ராதாகிருஷ்ணன்

*(முன்னாள் ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி)*

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா ராதாகிருஷ்ணன் 10.11.2002 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மு.வைத்திலிங்கம் (Retired Postmaster), உரும்பிராய் அம்மாக்குட்டியின் மருமகனும் பத்மாசினியின் அன்புக் கணவரும் சுதர்ஷன், கௌசல்யா, பிறதி, சுசி ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி பூபாலசிங்கம் பரஞ்சோதி, விவேகானந்தம், காலஞ்சென்ற பாலசிங்கம் ஆகியோரின் சகோதரனும் பூபாலசிங்கம், தங்கரத்தினம், காலஞ்சென்ற பத்மராணி, சரோஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*27, 2ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.* (10510) தகவல்: செ.பூபாலசிங்கம்

## நாகநாதர் சுப்பிரமணியம்

*(முன்னாள் முகாமையாளர், சாவகச்சேரி பெற்றோல் நிலையம்)*

மந்துவிலைப் பிறப்பிடமாகவும், கைதடி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதர் சுப்பிரமணியம் கொழும்பில் காலமானார்.

அன்னார் நாகநாதர்-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் தயா, காந்தன், காணாமற்போன தவம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற செல்லம்மா, தங்கம்மா, சின்னத்தங்கம், இராசம்மா, கந்தையா ஆகியோரின் மூத்த சகோதரரும் கணேசனின் மைத்துனரும் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் தம்பதியினரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (11-11-2002) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சரசாலை வடக்கு,*
*சாவகச்சேரி.* (சி-24831) தகவல்: நா.கந்தையா (சகோதரன்)

## நல்லதம்பி கனகசபை

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி கனகசபை 09.11.2002 சனிக்கிழமை விபத்தில் காலமானார்.

அன்னார் நல்லதம்பி தம்பதியினரின் அருமை மகனும் வல்லிபுரம் தம்பதியினரின் அன்பு மருமகனும் வள்ளியம்மையின் அன்புக் கணவரும் குணரட்ணம் (டென்மார்க்), நவரட்ணம் (கனடா), உதயரட்ணம் (கனடா), ஜெயரட்ணம் (டென்மார்க்), நிர்மலா ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகமலர் (டென்மார்க்), ஞானகலை (கனடா), சாந்தி (கனடா), இராசமணி (டென்மார்க்), திருநாமம் (புகையிரத சாரதி, திருகோணமலை) ஆகியோரின் மாமனாரும் நிருஷா, நிசாந்தன், நித்தியா, யாழினி, கரிதாஸ், துளக்ஷன், அனுசியா, பிரவீன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் வேலுப்பிள்ளை, காலஞ்சென்ற கண்ணகை மற்றும் முருகேசு பொன்னம்மா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (12.11.2002) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் வேரோண்டை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.* (10519) தகவல்: S.திருநாமம் *(மருமகன்)*.




# மீட்புநிதி மீளப்பெறுவோர் விவரம்

**மானிப்பாய்**
(மா/14?0) செல்வி தெய்வானைப்பிள்ளை கணபதிப்பிள்ளை

**காரைநகர்**
(கா/1?02) வைரவன் கனகரத்தினம்

**சாவகச்சேரி**
(சா/4?39) மதன் வேலுப்பிள்ளை
(சா/6?82) பொன்னம்பலம் தில்லைநாதன்

**கிளிநொச்சி**
(கி/1135) சிதம்பரப்பிள்ளை கந்தையா
(கி/1234) சின்னத்தம்பி இராமநாதன்
(கி/1267) முத்துச்சாமி ராயு
(கி/1411) இராசையா இராசரத்தினம்
(கி/2522) இராமு நாகலிங்கம்
(கி/2674) நாராயணசாமி சிவலிங்கம்
(கி/2692) செல்வி மாயதவம் சிவசிங்கம்
(கி/2788) கிட்ணன் இராமசாமி
(கி/2799) இராமசாமி சிவனு
(கி/2869) முனியாண்டி அரசரட்ணம்
(கி/2933) ஆறுமுகம் சங்கரப்பிள்ளை
(கி/3387) நாகேந்திரம் தில்லையம்பலம்

**முல்லைத்தீவு**
((மு/891) கறுப்பன் முத்துலிங்கம்
((மு/960) ஐயாத்துரை பாலசிங்கம்
((மு/980) செல்லையா அரவிந்தகுமார்
((மு/1383) நடேசு இரத்தினராசா
((மு/1554) சின்னத்துரை பாக்கியநாதர்

**கிளிநொச்சி மாவட்டம்**
(கி/229) திருமதி அரியதவமலர் சிறிசத்தியானந்தன்
(கி/468) தம்பு முத்துக்கிஸ்ணன்
(கி/510) மயில்வாகனம் யோகராசா
(கி/523) குமாரு ஆறுமுகம்
(கி/802) இராமநாதர் மகேசபிள்ளை
(கி/805) குமாரசுவாமி பஞ்சலிங்கம்
(கி/1075) திருமதி பரமேஸ்வரி கனகலிங்கம்
(கி/1568) இராசேந்திரம் தேவராசா
(கி/1601) வேலாயுதம் இராதாகிஸ்ணன்
(கி/1701) வேலுப்பிள்ளை சிறிரஞ்சன்
(கி/1807) கந்தையா முருகேசு
(கி/2092) நாகரட்ணம் சந்திரகாந்தன்
(கி/2172) கறுப்பையா நடராசா
(கி/2229) முருகுப்பிள்ளை தர்மலிங்கம்
(கி/2235) திருமதி சற்குணராணி நாகராசா
(கி/2268) திருமதி கோமளம் தங்கவேலாயுதம்
(கி/2300) திருமதி சாரதா இராசக்கோன்
(கி/2354) திருமதி அன்னலெட்சுமி தில்லையம்பலம்
(கி/2383) இரத்தினம் சிவராசா
(கி/2395) முத்துக்குமாரு கமலநாதன்
(கி/2473) வஸ்தியாம்பிள்ளை அல்பிரட்
(கி/2505) திருமதி சிவசோதி சத்தியமூர்த்தி
(கி/2538) கிருஷ்ணன் முருகேசு
(கி/2630) இஸ்ரியன் யஸ்ரீன் பெர்னாண்டோ
(கி/2945) திருமதி ஜெயலட்சுமி தவராசசிங்கம்
(கி/3048) நடராசா தவராசா
(கி/3194) வைரமுத்து கந்தசாமி
(கி/3291) கதிரவேலு ஆனந்தராசா
(கி/3358) திருமதி உமா கண்ணதாசன்
(கி/3360) விஜயகுமார் அருள்குமார்

**வவுனியா மாவட்டம்**
(வ/36) கணபதிப்பிள்ளை அமிர்தலிங்கம்
(வ/122) தம்பு சுந்தரம்பிள்ளை
(வ/124) பொன்னுத்துரை கலைநாதன்
(வ/157) சதாசிவம் செல்வராஜா
(வ/316) அருளம்பலம் இராமநாதன்
(வ/396) கந்தையா கனகசபை
(வ/435) இராமநாதன் பாலசிங்கம்
(வ/468) சின்னையா சிதம்பரநாதன்
(வ/478) பாலர் அருணாசலம்
(வ/613) திருமதி பாக்கியம் தங்கவேலு
(வ/652) திருமதி விஜயகுமாரி யோகநாதன்
(வ/712) மரியாம்பிள்ளை பென்ஜமின்

**முல்லைத்தீவு மாவட்டம்**
((மு/257) திருமதி வதனம் கிருஸ்ணமூர்த்தி
((மு/275) கறுப்பையாபிள்ளை கமலேந்திரன்
((மு/309) கணபதிப்பிள்ளை கணேசராசா
((மு/414) அப்பாத்துரை புஸ்பராசா
((மு/479) தங்கராசா விக்னேஸ்வரன்
((மு/705) திருமதி அமலசீலி ஜோசேப்
((மு/711) திருமதி அந்தோனியப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை
((மு/712) துரையப்பா விநாயகமணி
((மு/915) திருமதி கனகேஸ்வரி குழந்தைவேல்
((மு/1078) செல்லத்துரை உதயகுமார்
((மு/1177) மன்னாஸ் நவரத்தினம்

**மன்னார் மாவட்டம்**
(ம/1) திருமதி ஆனந்தகலா மோகானந்தசிவம்
(ம/67) திருமதி புவனேஸ்வரி நமசிவாயம்
(ம/115) திருமதி தவநாயகி பரமானந்தம்
(ம/168) திருமதி தங்கமணி வேலாயுதபிள்ளை
(ம/230) செபமாலை ஞானரட்ணம்
(ம/242) சந்தாம்பிள்ளை கபிரியேற்பிள்ளை
(ம/299) திருமதி கமலாம்பிகை கந்தசாமி
(ம/462) திருமதி தெய்வானை கிருபாகரன்
(ம/722) பரமு சண்முகநாதன்

**வெளியகல்வு**
(வெ/48) செல்வி தமலாம்பிகை பஞ்சரட்ணம்
(வெ/72) செல்வி சந்திரா அருளம்பலம்
(வெ/81) செல்வி மனோராணி சாந்தசொரூபன்
(வெ/90) செல்வி ஆனந்தசெல்வி நடராசா
(வெ/98) அருணாசலம் இரத்தினசபாபதி
(வெ/107) செல்லப்பா சக்திவேல்
(வெ/130) செல்வி சுசீலா கோ
(வெ/131) சின்னராசா மகேசன்
(வெ/154) சிவகுரு மணிவண்ணன்
(வெ/160) செல்வி சுதாமதி சுகுமார்
(வெ/163) செல்வி இரத்தினேஸ்வரி இராசதுரை
(வெ/166) செல்லையா தயாளன்
(வெ/167) கந்தசாமி இராசரத்தினம்
(வெ/168) செல்வி இரத்தினம் பாலசிங்கம்
(வெ/169) கனகசிங்கம் சுரேந்திரன்
(வெ/170) முருகையாப்பிள்ளை சதானந்தராஜ்
(வெ/195) புஸ்பவதி நவரட்ணம்
(வெ/198) செல்வி இராஜலக்சுமி சௌந்தரராஜன்
(வெ/199) செல்வி பத்மினி பத்மநாதன்
(வெ/205) தம்பிப்பிள்ளை துரைச்சாமி
(வெ/206) நடராசா பேரின்பநாதன்
(வெ/218) செல்வி மகேஸ்வரி முத்துலிங்கம்
(வெ/220) செல்வி புவனேஸ்வரி பாக்கியநாதன்
(வெ/223) செல்வி மங்கையர்க்கரசி சின்னத்துரை
(வெ/224) செல்லத்துரை அன்னலிங்கம்
(வெ/227) சர்வானந்தன் கருணாகரன்
(வெ/240) சண்முகதாசன் மீனலோஜினி
(வெ/241) செல்வி வித்தியா தவலிங்கம்
(வெ/245) வெங்கட்ராமன் வெங்கிடசாமி
(வெ/256) நவரட்ணம் ஜெயரட்ணம்
(வெ/263) அப்புக்குருக்கள் குருமூர்த்தி
(வெ/267) செல்வி விஜயலட்சுமி பசுபதி
(வெ/270) சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன்
(வெ/276) கந்தையாப்பிள்ளை உலகநாதன்
(வெ/281) சிதம்பரநாதன் சபேசன்
(வெ/293) செல்வி பதுமநிதி சண்முகராசா
(வெ/294) செல்லன் முருகையா
(வெ/296) புவிராஜசிங்கம் வசந்தராஜா
(வெ/299) சின்னையா யோகராசா
(வெ/304) செல்லையா பாலசுப்பிரமணியம்
(வெ/315) முத்துலிங்கம் தயாபரன்
(வெ/328) செல்வி றோகினி நடராசா
(வெ/339) செல்வி ஜெகன்மதி துரைநாயகம்
(வெ/340) சிவக்கொழுந்து சிவானந்தம்
(வெ/341) கந்தையா சிவலிங்கம்
(வெ/344) கந்தையா கணேசலிங்கம்
(வெ/349) செல்வி பரமேஸ்வரி தர்மபாலன்
(வெ/358) செல்வி சுலோஜினி ஞானராசா
(வெ/365) செல்வி கமலாம்பாள் ராதாகிருஸ்ணன்
(வெ/367) கந்தசாமி விஜயானந்தன்
(வெ/375) துரைராஜா ஆனந்தீஸ்வரன்
(வெ/376) சின்னத்துரை நவரத்தினம்
(வெ/379) கந்தசாமி இராஜேந்திரன்
(வெ/386) சச்திவேல் செல்வராஜா
(வெ/398) செல்வி பரமேஸ்வரி மகேசன்

(மிகுதி நாளை)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை
செல்வி அஞ்சனாதேவி வைரமுத்து
அவர்களின் அன்புத் தாயாரும் விஞ்ஞான ஆசிரியர்
திரு.அ.ஜெகதீஸ்வரன் அவர்களின் பாசமிகு பேர்த்தியாருமான

### திருமதி வைரமுத்து இளையபிள்ளை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.* - அதிபர், ஆசிரியர்கள்,
*காரைநகர்.* (C-24837) மாணவர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா திருநாவுக்கரசு

(ஓய்வு பெற்ற நீர்ப்பாசன திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர், விஷகடி வைத்தியர்)

மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா திருநாவுக்கரசு நேற்று (11.11.2002) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

இவர் புவனலட்சுமியின் அன்புக்கணவரும் சிவநேசன் (ஜேர்மனி), தயாநிதி, நமோநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இராசரத்தினம், பரமேஸ்வரன் (பிரான்ஸ்), சி.ஆனந்தமாலா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் டிவாகர், பிரபாகினி, சோபனா, சுதர்சினி, பிரசன்னா, பிரதீப், ரவிராஜ், சுயானா, வாசனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2002) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.இராசரத்தினம் (மருமகன்).
*கல்ரெக்ஸ் லேன்,*
*கண்டி வீதி, சாவகச்சேரி.* (10539)

### கனகரத்தினம் சோதிராஜா

இணுவிலைப் பிறப்பிடமாகவும் Parisஐ வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் சோதிராஜா அவர்கள் 7.11.2002 வியாழக்கிழமை Parisஇல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசையா மற்றும் சந்திரவதனாவின் அன்பு மருமகனும் உமாநிதியின் அன்புக் கணவரும் நிராஜ், நிலுஜாவின் பாசமிகு தந்தையும், சந்திரகாந்தன், ஜெயந்திமாலா, தயாநிதி, சிவநிதி, இந்திரகாந்தன், பத்மநிதி, கலாநிதி, சிறிகாந்தன், ஜீவகாந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஜெயமலர், இரவீந்திரராஜா, இரவீந்திரன், இராஜேஸ்வரன், இரஞ்சிதமலர், இராஜரட்ணம், ஜெகதீஸ்வரன், வனஜா, லோகலைமாணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.10.2002) புதன்கிழமை Paris இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சந்திரவதனா இராசையா (மாமி).
தொ.பே.இல: 0033146723948 (Paris)
*ஏழாலை தெற்கு,*
*சுன்னாகம்.* (10533)


## வினாத்தாள்கள் விற்பனைக்கு

தரம் 3 முதல் O/L வரை
அக்கடமி ஆண்டிறுதிப் பரீட்சை வினாத்தாள்கள்
இன்று விற்பனைக்கு வருகின்றன.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
யாழ்ப்பாணம்.


## தவறிவிட்டது

எரிக்சொன் கைத்தொலைபேசி பரமேஸ்வராச் சந்திக்கும் பொற்பதி வதிக்கும் இடையில் நேற்று (11.11.2002) திங்கட்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: 18/1, மனல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். ஒப்படைப்பவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். (10536)


## சிந்து திரை அரங்கு

உரும்பிராய்.

விஜயகாந், சிம்ரன் நடித்த,
**ரமணா**
10.30, 3.00, 7.00 காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. (24836)

## நிரஞ்சனாஸ்

சங்கானை

விஜய், சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த
**யூத்** (ரீலீஸ்)
காட்சிகள்: 11.00, 3.45, 6.00 (பு.நேரம்) (C/24617)

## ராஜா யாழ்ப்பாணம்.

அஜித் (இருவேடங்களில்), மீனா நடித்த
**வில்லன்** (ரீலீஸ்)



கா.நே.: 10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)
விசேட காட்சி: 9.30

## நாகம்ஸ் சுன்னாகம்

குணால், மனோஜ், அனிதா, நம்பியார் நடித்த
**வருஷமெல்லாம் வசந்தம்** (ரீலீஸ்)
காட்சிகள்: 11.00, 2.00
வெள்ளி, சனி, ஞாயிறு: 6.30 (புதிய நேரம்.)


## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் தம்பிமுத்து

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கரந்தன், நீர்வேலியை வதிவிடமாகக் கொண்ட நாகலிங்கம் தம்பிமுத்து நேற்று (11.11.2002) திங்கட்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவக்கொழுந்தின் அன்புக் கணவரும் மற்றும் சுந்தரேஸ்வரன், பரமேஸ்வரன், கமலாதேவி, வசந்தமல்லிகா, ஜமுனாமலர், காலஞ்சென்ற கமலேஸ்வரன் மற்றும் கற்பகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தில்லைநடராஜா, தங்கராஜா, ஸ்ரீகாந்தன், தில்லைநாயகி, ஞானேஸ்வரி, விஜயாம்பிகை ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (12.11.2002) செவ்வாய்க்கிழமை பி.ப. 2மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் கிழக்கு இளங்காடு மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
ந.பரமேஸ்வரன் (ஆசிரியர்)
ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.
*கரந்தன்,*
*நீர்வேலி.* (10537)

### பெரியான் கனகு (பொன்னன்)

புத்தூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பெரியான் கனகு (பொன்னன்) நேற்று (11.11.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியான் - புனிதம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தவசி - தேனி தம்பதியினரின் அன்பு மருமகனும் பறுவதம் அவர்களின் பாசமிகு கணவரும் ஈசன் (சுவிஸ்), பவானி, வலி, கனிதா (லண்டன்), புனிதம் ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயகுமார் (லண்டன்), சச்சிதானந்தம், இராசாம்பிகை, ராசலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் கவியுகன், பானுஷா, சதுர்ஷா ஆகியோரின் பேரனாரும் கணபதி, சிதம்பரப்பிள்ளை, அப்புத்துரை, வைரவி, சின்னம்மா காலஞ்சென்றவர்களான பொன்னி, சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற செல்லர் மற்றும் பொன்னன், வெள்ளச்சி, தங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (12.11.2002) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக புத்தூர் கிந்துசிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மா.சச்சிதானந்தம் (மருமகன்)
*புத்தூர் வடக்கு,*
*மருதடி.* (10538)

## சமாதான முயற்சிக்கு சர்வதேச அங்கீகாரம் என்கிறார் பிரதமர்

கொழும்பு,நவ.12

எதிர்வரும் 25ஆம் திகதி ஒஸ்லோவில் இடம்பெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் மூலம் உதவிகள் கிடைக்கும். அத்துடன் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச அந்தஸ்தும் கிடைக்கும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வெளிநாட்டு செய்தி ஏஜென்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒஸ்லோ மாநாடு ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையப்போகின்றது. உலகில் உள்ள பல்வேறு நாடுகள் இதில் பங்குபற்றுகின்றன. விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தரான அன்ரன் பாலசிங்கமும் பங்குபற்றுகின்றார். அரசியல் பிரதிநிதியாக நான் பங்குபற்றுகின்றேன்.

இந்த மாநாட்டின் மூலம் கூடுதல் நிதி உதவி கிடைக்கும் அதே நேரத்தில் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச அந்தஸ்தும் கிட்டும்.

தற்சமயம் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சி முறிவடைய மாட்டாது. சர்வதேசத்தின் வலுவான ஆதரவு கிடைக்கும்போது பேச்சு முறியும் என்ற கேள்விக்கே இடமில்லை என்றார் அவர். (ம-3)

## வன்செயல்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சாலை ஒன்றின் முன் சிலர் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். ஆரம்பத்தில் 200 பேருக்கும் குறைவானோரே இருந்தனர். ஆனால், சிறிது நேரத்தில் 800 பேருக்கும் கூடுதலான வெளியார் அங்கு கூடி கலவரம்செய்ய முற்பட்டுள்ளனர்.

பாதுகாப்புக் கடமையிலிருந்த பொலீஸார் மீதும் இவர்கள் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால், 5பொலீஸார் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதேபோன்று வலல்லாவிட்ட பிரதேச சபைத் தலைவரும் அவரது சாரதியும் கொலை செய்யப்பட்டனர். இவை எல்லாவற்றையும் விட ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் அமைதியற்ற சூழலை உருவாக்கியதோடு ஒரு மாணவனின் பெறுமதிமிக்க உயிரும் பறிக்கப்பட்டுள்ளது.

ஓர் அரசியல் கட்சியாக அங்கீரிக்கப்பட்டு நாடாளுமன்றத்திலும் அங்கம் வகிக்கும் ஒரு கட்சி, தேசிய உடைமைகளை அழிப்பதிலும் வன்முறைகளைத் தூண்டிவிடுவதிலும் பின்னணியிலிருந்து செயற்படுவது கண்டிக்கத்தக்கதாகும்.எனவே இந்த நிலை தொடர இடமளிக்கமுடியாது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அமைதியை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவரும் வேளையில் தென்பகுதியில் 1989ஆம் ஆண்டுகளில்போல் கொலை கலாசாரத்தை மீண்டும் உருவாக்க முனைகின்றனர்.

- இவ்வாறு அமைச்சர் அறிக்கை விடுத்தபோது ஜே.வி.பியினர் சபையில் இருந்தனர். ஆயினும், ஆட்சேபணையோ, எதிர்ப்போ தெரிவிக்கவில்லை.

சபையின் வரவு - செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றிய ஜே.வி.பி. உறுப்பினர் பிமல் அரசு தமது கட்சி மீது சேறுபூசுகிறது என்றார். (ம)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாவிட்டால் 3லட்சம் ரூபா நஷ்டஈட்டுடன் ஒரு ஊழியர் ஓய்வு பெறலாம். அவர் ஓய்வூதியக் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளமுடியும்.

இவ்விரு திட்டங்களில் ஒன்றின் கீழ் அரச ஊழியர் சேவையிலிருந்து விலகச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

இதற்கான சுற்றுநிருபம் தயாரிக்கப்படுவதாகவும் - விரைவில் அது உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட விருப்பதாகவும் - கூறப்பட்டது.(ம-3)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் தனது கடமையை ஐ.தே.மு. செய்கிறது. மக்கள் போக்குவரத்துக்குப் பாதையைத் திறந்துவிட்டு நிவாரண உதவிகளை வழங்குகிறது. ஆனால் வெளிநாட்டு உதவிகளும் முதலீடுகளும் சரியான முறையில் கிடைக்கவேண்டுமாயின் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும்.

இம்முறை சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருக்கும் 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வன்னியைப் பொறுத்தவரை இது போதுமானதல்ல. அது மிகவும் அழிவுக்கு உட்பட்ட ஒரு பிரதேசம். அத்துடன் அதில் மூன்று மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனவே இப்பிரதேச எம்.பிக்களுக்கு ஒரு கோடி 50 லட்சம் ரூபாவை அடுத்த வரவு - செலவுத் திட்டத்திலேனும் ஒதுக்கவேண்டும் - என்றார் சித்தார்த்தன். (ம)

## ஈ.பி.டி.பி. கையளித்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் ஈ.பி.டி.பி. அமைப்பினரால் கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் கையளிக்கப்பட்ட ஆயுதத் தொகுதியில் உள்ள 9 மி.மி.துப்பாக்கிகளை பகுப்பாய்வு செய்ய வசதியாக குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் கையளிக்குமாறு இராணுவத் தளபதிக்கு உத்தரவு விடுத்தார் யாழ். நீதிவான். இந்த வழக்கு விசாரணையில் நீதிவான் பிறப்பித்த ஏனைய உத்தரவுகள் வருமாறு:-

★ இந்த வழக்கு விசாரணைக்குத் தேவைப்படும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களான மில்ரன், றில்வான் அல்லது சலீம் ஆகிய இரு சந்தேகநபர்களும் குற்றப் புலனாய்வு பொலீஸார் முன்பு ஆஜராகி வழக்கு விசாரணையை விரைவுபடுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் அல்லது அவர்கள் சார்ந்த இயக்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

★ வவுனியா மேல் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்ட இந்த வழக்கின் 2ஆம், 3ஆம் சந்தேகநபர்கள் ஒவ்வொரு மாதமும் 2ஆம், 4ஆம் சனிக்கிழமைகளில் காலை 8 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் யாழ் பொலீஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும்.

★ யாழ். நீதிமன்றின் நிபந்தனைக்கு அமைய இவர்கள் சொந்த ஊருக்கு சென்று வரலாம்.

ஆயினும், இந்த நீதிமன்றின் அனுமதி இன்றியோ அல்லது இவர்களை பிணையில் விடுவித்த வவுனியா மேல் நீதிமன்றின் அனுமதி இன்றியோ நாட்டை விட்டு வெளியே செல்லக் கூடாது.

★ 3ஆவது சந்தேக நபரான டேவிட் மைக்கல் கொலின் (முரளி) தனது சொந்த ஊரான திருகோணமலைக்குச் சென்று தங்கி நிற்கும் காலத்தில் திருகோணமலை பொலீஸ் நிலையத்தில் கையொப்பமிடலாம். அடுத்த மாதம் 11ஆம் திகதி மன்றில் ஆஜராகும்போது கையொப்பம் இட்டதற்கு ஆதாரமாக திருகோணமலை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் அறிக்கையை அவர் சமர்ப்பிக்கவேண்டும்.

முதலாம் மற்றும் நான்காம் சந்தேகநபர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வரையும் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா மேலதிக அறிக்கையை அடுத்த மாதம் 11ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு பொலீஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (ம-10)


எமது புதிய வீடியோCD வெளியீடு

ஒரிஜினல் ரகன் CD

★ ரமணா ★ வில்லன்

ஒரிஜினல் CD கள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்

அஸ்டி எலக்ரோனிக்ஸ்

யாழ்ப்பாணம். (C/24842)

MCS

324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)

இலவசக்கணனிப்பயிற்சி

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்

பதிவுகள் 14.11.2002 [illegible] நேரில்



கவலையை விடுங்கள்.....

உங்கள் தெரிவு IIS ஆக இருந்தால் .....

எதிர்காலத்தில் நீங்கள் ஓர்

IIS இன் கணனிக் கற்கை நெறிகளுக்கான புலமைப்பரிசில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களுக்கு : IIS யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி [illegible]



இளமை மற்றும் அழகின் ரகசியம்





பயோட்டின் -H

உங்கள் கூந்தல், சருமம் மற்றும் நகங்களின் ஊட்டத்திற்கு...

தினம் இரண்டே கேப்ஸ்யூல்கள்

Biotin - H ஆசிய நாட்டவரின் வாழ்க்கை சூழலுக்கேற்ப பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே Biotin - H தலைமுடி உதிர்தலை முற்றாக தடுப்பதுடன் அடர்த்தியான கூந்தலுக்கும் வழிவகுக்கின்றது.

பயோட்டின் - H விஞ்ஞான சான்று பெற்றது. பக்க விளைவுகள் இல்லை.

(C/24523)

ஏக விநியோகஸ்தர் : ஜெஸன் பார்மஸி, யாழ்ப்பாணம். T.P.:222 3191

சந்தைப்படுத்துவோர் : ARKEM கொழும்பு. T.P.:470290

பொருளியல்

A/L 2004

தேசிய வருமானம்

P.MOHAN B.B.A. (Hons)

ஆரம்பம் : 13.11.2002

புதன் 4.00 p.m.

மைசன் உடுவில் (10509)

அம்பாள் ரவல்ஸ்





- பலாலி விமான நிலையத்திற்கு 1200/-
- அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு விசேட சலுகைக் கட்டணம்
- A/C, Non A/C வாகனத்துக்கு

அம்பாள் ரவல்ஸ்

கம்பஸ் லேன் (மக்கள் வங்கிக்கு அருகில்)

திருநெல்வேலி.

222 2742, 0777-518319 (10504)

எமது புதிய வீடியோ CD வெளியீடு

விஜயகாந்தின் ரமணா

வீடியோ விமல்

யாழ்ப்பாணம் (C/24839)

எமது புதிய வீடியோ CD வெளியீடு

விஜயகாந்த், சிம்ரன், நடித்த, ரமணா

I.T.N பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி. (24841)

பணியாளர்கள் தேவை

1) பத்திரிகை மடித்தல்

2) பத்திரிகை விநியோகித்தல்

சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்போர் மட்டும் நேரில் வரவும்

'உதயன்' பணிமனை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/24835)

G.C.E O/L

ENGLISH MODEL PAPERS and PAST PAPER - 2001

வெளிவந்துவிட்டது!

O/L ENGLISH

பரீட்சைத் திணைக்களத்தின் வழிகாட்டலுக்கமைய தயார் செய்த முற்றிலும் எதிர்பார்க்கும் மாதிரி வினாத்தாள்கள், கடந்தகால (2001 டிசெ.) வினாத்தாள் விடைகளுடன்.

தொகுப்பு : த.தனேந்திரன்

B.Com. (Hons) M.M.Spl. (Jaf.), H.N.Dip.in Acc. (Cey.)

யாழ். - பூபாலசிங்கம், சிறிலங்கா, சுப்பிரமணியம், துர்க்கா (சுன்னாகம்)

பருத்தி. - பிரியங்கா, நாவலர். வன்னி - அறிவமுது.

வவுனியா - கவிதா

தீவகம் - மணி கல்வி நிறுவனம், வேலணை. - T.P: 0777148532 (10535)


## மரண அறிவித்தல்

### கதிர்காமு நடுவிலார்

சீறிமலை வீதி, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு நடுவிலார் நேற்று (11.11.2002) திங்கட்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - சின்னாச்சன் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற எல்லுப்போளையின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - குஞ்சரம் மற்றும் ஆனைக்குட்டி ஆகியோரின் அன்புச்சகோதரனும் சின்னத்தங்கம், சுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாவகலாதேவியின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் அலடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ந.சுப்பிரமணியம் (மணியம்) - மகன்,
(காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிடெட்)

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (10540)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.11.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.